திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

டிசம்பர் 2019, விலை ரூ.5/-




02-12-2019

திருச்சானூர்

ஸ்ரீபத்மாவதி தாயார்

புஷ்பயாகம்

## புருஷோத்தமனுக்கு புஷ்பயாகம்...

**திருமலை ஆலயத்தில்
ஸ்ரீதேவி பூதேவி உடனுறை
திருமலையப்ப ஸ்வாமிக்கு
04.11.2019 அன்று நடைபெற்ற
புஷ்பயாக மஹோத்ஸவத் திருக்காட்சிகள்**













*த்$_4$ருஷ்டகேதுச்சேகிதாந:*
*காசிராஜச்ச வீர்யவாந் ।*
*புருஜித்குந்திபோ$_4$ஜச்ச*
*சைப்$_2$யச்ச நரபுங்க$_3$வ: ।।*


**திருஷ்டகேதுவும், சேகிதானனும்,**
**பலசாலியான காசிராஜனும், புருஜித்தும்,**
**குந்திபோஜனும், மனிதர்களிற்சிறந்த**
**சைப்யனும் மகாரதிகளாக**
**இருக்கிறார்கள்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–5*

*கோதை பிறந்த ஊர் கோவிந்தன் வாழுமூர்*
*சோதி மணி மாடம் தோன்றும் ஊர்-நீதியால்*
*நல்ல பத்தர் வாழும் ஊர் நான்மறைகள் ஓதுமூர்*
*வில்லிபுத்தூர் வேதக்கோனூர்*

**கோதை பிறந்த ஊராகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் கோவிந்தனாகிய எம்பெருமான் வாழுகின்றான்; அவ்வாறு பெருமை வாய்ந்த அவ்வூரிலே உள்ள இல்லங்களில் உள்ள மணிமாடங்களில் பிரகாசமான விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டுள்ளன; அறம் சார்ந்த வாழ்க்கை வாழும் வைணவ பக்தர்கள் வசிக்கும் ஊர். தினமும் நான்மறைகளான வேதங்களை ஓதும் பண்டிதர்கள் பலர் நிறைந்த ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர்.**

*- ஆண்டாள் சாற்றுப் பாசுரம்*



# ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி வருஷம் கார்த்திகை/மார்கழி மாதம் தக்ஷிணாயணம் ஸரத்/ஹேமந்த்ருது சகவருஷம் 1941 கலியுகாதி 5120 டிசம்பர் 2019

| ஆங் | தமிழ் | கிழமை | திதி | நட்ச. | விசேஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | 15 | ஞாயிறு | பஞ் | உத்ரா | சுப நாள், ச்ரவணம், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவம் அவப்ருதம், பஞ்சமி தீர்த்தம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம், திருமங்கையாழ்வார் உற்சவம் ஆரம்பம். |
| 2 | 16 | திங்கள் | சஷ் | திவோ | சம்பா சஷ்டி, சுப நாள், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் புஷ்பயாக மஹோத்ஸவம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி சன்னதியில் கந்த சஷ்டி உத்ஸவம், சுப்ரமணிய சஷ்டி. |
| 3 | 17 | செவ் | சப் | அவி | கரி நாள். |
| 4 | 18 | புதன் | அஷ் | சத | மாத துர்காஷ்டமி புதாஷ்டமி. |
| 5 | 19 | வியா | நவ | பூரட் | கோட்டம் அமைக்க, பத்திரப்பதிவு செய்ய. |
| 6 | 20 | வெள்ளி | தச | உத்ரட் | சுப நாள், விருத்தி திதி. |
| 7 | 21 | சனி | தச | ரேவ | வ்ய-சிரா. |
| 8 | 22 | ஞாயிறு | ஏகா | அஸ் | மோக்ஷ ஏகாதசி மத்ஸ துவாதசி. |
| 9 | 23 | திங்கள் | துவா | பர | ஸோமப் பிரதோஷம், பரணி தீபம், சக்கர தீர்த்த முக்கோட்டி. |
| 10 | 24 | செவ் | திர | கார் | அண்ணாமலையார் தீபம், திருமங்கையாழ்வார் சாத்துமுறை, திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி கார்த்திகை தீபோத்ஸவம். |
| 11 | 25 | புதன் | சசி | ரோகி | வைகானஸ தீபம், திருமலையப்ப ஸ்வாமி ஆலயத்தில் கார்த்திகை தீபோத்ஸவம், கபிலதீர்த்த முக்கோட்டி, திருப்பாணாழ்வார் திருநட்சத்திரம், ஸ்ரீதத்த ஜெயந்தி. |
| 12 | 26 | வியா | பௌ | ரோகி | பைரவி/அன்ன பூர்ணி ஜயந்தி,பாஞ்சராத்ர தீபம். |
| 13 | 27 | வெள்ளி | பிர | திரு | மார்கசிர பஹுள. |
| 14 | 28 | சனி | துவி | புன | குரு, மே.அஸ்தமனம். |
| 15 | 29 | ஞாயிறு | திரு/சது | பூச | க்ஷய திதி. சுக்ரன்-மகரம், சங்கடஹர சதுர்த்தி, திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருவடி சன்னதிக்கு எழுந்தருளுதல். |
| 16 | 30 | திங்கள் | பஞ் | ஆயி | வை-சிரா சூரியன், தனுசு மா.3ம. 28நி. ஷடசீதி புதன்-கி.அஸ்தமனம். |
| 17 | 1 | செவ் | சஷ் | மக | சஷ்டி தனுர்மாஸ பூஜாரம்பம் |
| 18 | 2 | புதன் | சப் | பூர | பூச்சி மருந்துகள் தயாரிக்க/ தெளிக்க, திஸ்ரோஷ்டகா. |
| 19 | 3 | வியா | அஷ் | உத் | காலாஷ்டமி. அஷ்டகா. |
| 20 | 4 | வெள்ளி | நவ | ஹஸ் | அன்வாஷ்டகா. |
| 21 | 5 | சனி | தச | சித் | .... |
| 22 | 6 | ஞாயிறு | ஏகா | சுவா | ஸபலா ஏகாதசி, கரிநாள். |
| 23 | 7 | திங்கள் | துவா | விசா | ஸோமப் பிரதோஷம். |
| 24 | 8 | செவ் | திர | அனு | மாதசிவராத்ரி தனிய நாள். |
| 25 | 9 | புதன் | சசி | கேட் | சர்வ அமாவாசை, செவ்வாய் விருச்சிகம், புதன்-தனுசு, கரிநாள். ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜயந்தி, தொண்டரடிப்பொடியாழ்வார் திருநட்சத்திரம். |
| 26 | 10 | வியா | அமா | மூல | சூரிய கிரஹணம், திருமலையப்ப ஸ்வாமி ஆலயத்தில் அத்யயனோத்ஸவம் ஆரம்பம். |
| 27 | 11 | வெள்ளி | பிர | பூரா | சந்திர தரிசனம், கரிநாள், சனி.மே. அஸ்தமனம் புஷ்ய சுத்த. |
| 28 | 12 | சனி | துவி | உத்ரா | .... |
| 29 | 13 | ஞாயிறு | திரு | திவோ | ச்ரவணம், வாகனம் வாங்க/பயில |
| 30 | 14 | திங்கள் | சது | அவி | மாத சதுர்த்தி. |
| 31 | 15 | செவ் | பஞ் | சத | ... |




சிறப்பு ஆசிரியர் :
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
பிரதான ஆசிரியர் :
Dr. K.**ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு.** R.V. **விஜயகுமார்,** பி.ஏ. பி.எட்.,,
துணை செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**

**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர். -பிரதான ஆசிரியர்

மலர் 50 இதழ் 07

# உள்ளுறை

பக்கம்

**திருமங்கையாழ்வார் போற்றும் திருமலை** 7
*- கலைமாமணி, முனைவர் இரா.வ. கமலக்கண்ணன், காஞ்சிபுரம்.*
**ஆழ்வாராசாரியர்கள் காட்டும் வாழ்க்கை நெறிகள் அரங்கனைக் கண்ட கண்கள்** 12
*- திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.*
**திருமாலை அறியாதார் திருமாலை அறியார்** 16
*- திரு. வெ. இராமமூர்த்தி, சென்னை.*
**திருப்பாவை திருவெம்பாவை** 19
*- திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத்.*
**சிறார் வாக்கு : இராமாயணத்தில் ரசித்த சகோதரத்துவம்** 23
*- செல்வன். ரித்திக் நாராயணன், ஐதராபாத்.*
**திவ்ய திருத்தலம்–திருமலை** 24
*- திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி.*
**பச்சை தோரணம் : திருப்பாவையில் பெண்கள்** 31
*- முனைவர் உ.கிருஷ்ணன், மீஞ்சூர்.*
**திருவண்ணாமலை** *-திரு. பனையபுரம் அதியமான், திருவான்மியூர்.* 34
**ஶ்ரீமத்பாகவத கதை சாகரம்–ரிஷப தேவர் அவதாரம்** 37
*- டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர்.*
**அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** 39
*- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.*
**மார்கழியும் பாவையும்** *- திருமதி. எஸ். பவானி, மன்னார்குடி.* 42
**108 திவ்யதேச வைபவம் – திருமாலிருஞ்சோலை** 44
*- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.*
**பகவத் கீதை–இளைய சமுதாயம் – கீதா ஜெயந்தி** 47
*- திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா.*
**ஆயுர்வேதம் – புங்கை மரம்** 49
*- திருமதி. பா. காயத்ரி, கேரளா.*
**2019, டிசம்பர் மாத ராசி பலன்** 51
*- திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்.*

## அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : **ஶ்ரீபத்மாவதி தாயார் புஷ்பயாகம், திருச்சானூர்.**
பின்னட்டை : **கோதை அலங்காரத்தில் கோவிந்தன், திருமலை.**

உங்களுடன்...

# கிருஷ்ணம் வந்தே ஜகத்குரும்!



பகவத்கீதை எல்லா காலத்திற்கும் ஏற்புடைய நூலாகும். அனைவருக்கும் எப்பொழுதும் வழிகாட்டியாகவும் விளங்குகிறது. இந்நூலில் உலகளாவிய உண்மைகள், தற்காலத்திற்கான தர்ம நெறிகள் என பல விஷயங்கள் அடங்கி உள்ளன. எனவேதான் இந்நூல் இன்றைய காலகட்டத்திற்கும் ஒத்து வருகின்றது. பகவத்கீதை உபதேசம் அன்று குருக்ஷேத்திரத்தில் நடைபெற்றிருந்தாலும், அந்த உபதேசம் இன்று அனுதினமும் மனித மனத்திற்கு பயிற்சி அளித்துக் கொண்டே உள்ளது. குருக்ஷேத்திரம் தர்ம க்ஷேத்திரமாகும். புலன்கள் எனும் இரதத்தில் பூட்டிய குதிரைகளை கட்டுப்படுத்தக்கூடிய கிருஷ்ண பகவானே சர்வ அந்தர்யாமியான பரமாத்மாவாவார்.

பாரத திருநாட்டில் ஆன்மீக கலாச்சாரத்திற்கு கிருஷ்ண பரமாத்மா மாபெரும் குரு. பரிபூரணர். அர்ஜுனன் அவரின் சீடன். இது ஒரு குரு சீடர்களுக்கான உறவு முறையாகும். ஆத்ம சம்பந்தமாக எழுதப்பட்ட கீதை நம் கண் முன்னே உள்ளது. அந்த உபதேசம் மனித இனத்திற்கு நன்மை பயக்கும் உபேதசம். எனவே ஸ்ரீமத் பகவத் கீதை இன்றைக்கும் புதுமை படைப்பாகவே உள்ளது. மானிட இனம் அனுதினமும் பின்பற்ற வேண்டிய நூல். புண்ணிய பூமியான குருக்ஷேத்திரத்தில் கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்கு கூறிய உபதேசமே காலத்திற்கு அப்பாற்பட்டு ஆத்ம ஞான பரிசோதனைக்கு வழிவகுக்கிறது. மேலும் சிறப்பு என்னவெனில் குருக்ஷேத்திரத்தில் வீரமரணமடைந்தவர்கள் உயர்வானதான சொர்க்கத்தை அடைவார்கள் என குரு ராஜாவிற்கு பிரம்மா உரைக்கின்றார்.

படைப்பு துவங்கிய நாள் முதலே பாரத கண்டத்தை பிறப்பிடமாகக் கொண்ட புவியின் சரித்திரமே மகாபாரதம். இலட்ச சுலோகங்களைக் கொண்ட மகாபாரதத்தை விஞ்சிய மற்றொரு பெரிய நூல் உலக இலக்கியங்களிலேயே இல்லை. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும் நாம் ஒவ்வொருவரும் கீதையில் நம்முடைய சுய உருவைக் காணலாம். நாம் நம் மனநிலையை, நம் தனித்தன்மையை, நம் சமய தத்துவங்களை நமக்கு நாமே கீதையில் காண லாம். குருக்ஷேத்திர போர் சமயத்தில் கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்கு கர்ம, பக்தி, ஞான யோகம் என பகவத் கீதையை பதினெட்டு அத்தியாயங்களில் மூன்று பாகங்களாகப் பிரித்து எழுநூறு சுலோகங்களால் இன்றைக்குத் தேவையான, முழுமையான, விரிவான பகுப்பாய்விற்கான மிகப்பெரிய நூலாக அளித்துள்ளார். மனிதன் தொழில், சமூக, ஆத்ம, நல்லொழுக்கங்களிலிருந்து பின் வாங்காமல் கடமையைச் செய்ய கீதை வலியுறுத்துகின்றது. இந்த கடமையின் மறு உருவமே கர்மா, பயனை விட பணி முக்கியம் என்பது கீதையின் சாராம்சமாகும். மனிதப்பிறப்பு என்பது உடலிற்கு சம்மந்தப்பட்டது மட்டுமே அல்ல. உடல் என்றும் அழியக்கூடியது. நிலையற்றது. குறுகிய காலம் மட்டுமே இருக்கக் கூடியது. எனவே இந்நிலைகளுக்கு எல்லாம் சான்றாய் அமைந்து உயர்ந்து நிற்பது முக்கியம். அதுவே ஆத்ம ஜீவனம்.

ஆத்மா என்பது எழுத்துப்போன்றது. அழிவற்றது. அமிழ்தாவது. நாம் மறுபிறவியை போக்க யோகம், தியானம் வாயிலாக புலன்களை வசப்படுத்த முடியும் எனக் கீதை வெளிப்படையாகக் கூறுகின்றது. குரு சீடன் உரையாடல் வடிவில் உணர்வுப்பூர்வமான இரகசியங்களை வெளிக்கொணர்கிறது கீதை. கிருஷ்ண பகவான் கீதையை அர்ஜுனனுக்கு மட்டும் உபதேசிக்கவில்லை நமக்கும் சேர்த்துதான். கீதை நிஷ்காம கர்ம சித்தாந்தத்தைக் கூறி, மனிதர்கள் எல்லாக் கர்மாக்களையும் செய்தாலும், கர்மாவில் சிக்கிக் கொள்ளாமல் எப்படி மேன்மையானவர்களாக ஆக முடியும் என்பதை நிரூபிக்கிறது. கீதை அனைத்து உபநிஷத்துக்களின் சாரமாகும். யோக சாஸ்திரம், கர்ம சாஸ்திரம், ஞான சாஸ்திரம் என அனைத்திலும் சிறந்த மானிட வாழ்க்கையின் ஆனந்த இரகசியத்தை அர்ஜுனன் மூலமாக உலகிற்கு வழங்கிய மிக உயர்வான நூலாகும் கீதை. இக்கீதை அவதரித்த புண்ணிய நாளை ஒவ்வொரு இந்தியக்குடிமகனும் ஒரு பருவ தினமாக கொண்டாடி அனைத்து நலன்களையம் பெற வேண்டும் என்பதே அவா!



# திருமங்கையாழ்வார் போற்றும் திருமலை

கலைமாமணி, முனைவர்
இரா.வ. கமலக்கண்ணன்,
காஞ்சிபுரம், 9976366781



மயர்வற மதிநலம் பெற்ற ஆழ்வார்களின் மங்களாசாசனம் பெற்ற திருத் தலங்கள் 108 திவ்விய தேசங்களாகும். கார்த்திகையில் கார்த்திகை நட்சத்திரத்தில் அவதரித்த திருமங்கையாழ்வார் மட்டும் 86 திவ்விய தேசங்களை மங்களாசாசனம் செய்துள்ளார். இவற்றுள் திருமலையைப் பற்றிய அவரது பாசுரக் கருத்துக்களைச் சிந்திப்போம். பெரிய திருமொழியில் முதற் பத்து எட்டாம் திருமொழி முதல், இரண்டாம் பத்து முதல் திருமொழி முடிய 40 பாசுரங்களால் முழுமையாகத் திருமலையை மங்களாசாசனம் செய்கிறார். பாசுரக் கருத்துக்களைத் தொகுத்து நோக்குவோம்.

*"....புராணர் தம்மிடம் பொங்குநீர்ச்*
*செங்கயல் திளைக்கும் சுனைத் திருவேங்கடம் அடை நெஞ்சமே!"* – 1:8:1

வேங்கடம் வடநாட்டுத் திருப்பதிகளுள் முதலானது. "பெருமாள் எழுந்தருளி இருக்குமிடம், நீரில் கயல்மீன்கள் களித்து வாழும் சுனைகளை உடையது திருமலை ஆகும். அத்திருமலையை மனமே! அடைவாயாக!" என ஆற்றுப்படுத்துகிறார்.

*"...தெள்ளியார் வணங்கும் மலைத் திருவேங்கடம் அடை நெஞ்சமே!"* –1:8:2

"இறைவனைத் தவிர வேறு பயனை வேண்டாதவர் நாளும் வழிபடும் மலையான திருமலையை மனமே! அடைவாயாக!"

*"...ஆநிரைக்கு இடர்நீக்குவான் சென்று குன்றம் எடுத்தவன் திருவேங்கடம் அடை நெஞ்சமே!"* (1:8:3) பசுக்கூட்டங்களின் துன்பங்களை நீக்குவதற்காக கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்த பெருமான் எழுந்தருளியுள்ள திருமலையை, மனமே!



சென்றடைவாயாக. முதல் ஆழ்வார்களும் திருமலையில் சேவை சாதிக்கும் பெருமான் – கண்ணபிரானே! என்று போற்றியுள்ளனர்.

*"...தீர்த்த நீர்த் தடஞ்சோலை சூழ்*
*திருவேங்கடம் அடை நெஞ்சமே!"* –1:8:4

தூய நீராலும் சோலைகளாலும் சூழப்பட்ட திருமலையை, நெஞ்சமே! அடைவாயாக. எல்லா வளமும் நிறைந்த நீர் வளத்தை உடையதாய், அயர்வு அகற்றும் சோலைகளால் சூழப்பட்ட திருமலை என்க.

*"...திண் கைம் மாதுயர் தீர்த்தவன்*
*திருவேங்கடம் அடை நெஞ்சமே!"* –1:8:5

கஜேந்திரன் என்னும் யானையினது துன்பத்தைப் போக்கிய பெருமான்



எழுந்தருளியுள்ள திருமலையை, நெஞ்சே! அடைவாயாக. அவ்யானை தளர்ந்து ஓயும் வரை பார்த்திருந்து, பிறகு காலம் கழிந்து வந்து உதவிய குறை தீர அடியார்க்கு முன்னதாக உதவுவதற்காகவே வந்து இருக்குமிடம் திருமலை ஆகும்.

*"...திண் திறல் அரியாயவன் திருவேங்கடம்*
*அடை நெஞ்சமே!"* –1:8:6

வலிய நரசிங்க வடிவான பெருமான் எழுந்தருளியுள்ள இடம் திருமலை ஆகும். அதை நெஞ்சமே! சென்றடைவாயாக.

*" பாரும் நீர் எரி காற்றினோடு ஆகாசமும் இவை ஆயினான்*
*பேரும் ஆயிரம் பேச நின்ற பிறப்பிலி பெருகுமிடம்*
*காரும் வார் பனி நீள் விசும்பிடைச் சோரு மாமுகில் தோய்தர*
*சேரும் வார் பொழில் சூழ் எழில் திருவேங்கடம் அடை நெஞ்சமே!"* –1:8:7

மண், நீர், தீ, காற்று, வானம் என்னும் ஐம்பெரும் பூதங்களாய் இருப்பவனும், 1000 திருநாமங்களால் சொல்லப்படுபவனும், வினை காரணமாக வரும் பிறப்பில்லாதவனுமாகிய பெருமான் வளர்கின்ற இடம், வானத்தினின்று மழை நீரும், பனித்துளியும் சொரிய, பெரிய மேகங்கள் படியுமாறு உயர்ந்த சோலைகளாலே சூழப்பட்டு அழகுள்ள திருமலையை நெஞ்சே! அடைவாயாக, ஐம்பெரும் பூதங்களைச் சொன்னதால், உலகமே பெருமானின் திருமேனியாய் இருப்பது சொல்லப்பட்டது.

*"...கொம்பினன்ன இடைமடக்குறமாதர் நீள் இதணந்தொறும்*
*செம்புனம் அவை காவல் கொள் திருவேங்கடம்அடை நெஞ்சமே!"* –1:8:8

திருமலையில் உயர்ந்த பரண்களிலிருந்து குறப்பெண்கள் கொல்லை நிலங்களைக் காவல் செய்து கொண்டு இருப்பர். அப்படிப்பட்ட திருமலையை அடைவாயாக.

*" பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும் சொல்லி நின்று பின்னரும்*
*பேசுவார் தமை உய்ய வாங்கிப் பிறப்பறுக்கும் பிரானிடம்*
*வாசமாமலர் நாறுவார் பொழில் சூழ் தரும் உலகுக்கெலாம்*
*தேசமாய்த் திகழும் மலைத் திருவேங்கடம் அடை நெஞ்சமே!"* –1:8:9

நாவுக்கு இனிய திருநாமம் திருஎட்டெழுத்தாகும். அதை ஒருமுறை கூறி, மீண்டும் அதையே சொல்வோரை ஈடேறும்படி ஏற்று, அவர்களுடைய பிறவித் தொடர்பை நீக்கும் பெருமான் கோயில் கொண்டு இருக்கும் இடம், மலர்கள் மணம் வீசும் சோலைகளால் சூழப்பட்டதும், எல்லா உலகுக்கும் ஒளியாய் விளங்குவதுமாகிய திருமலையை அடைவாயாக.

*"செங்கயல் திளைக்கும் சுனைத் திருவேங்கடத்து உறை"* –1:8:10

"செல்வனைக்குறித்துத் திருமங்கையாழ்வார் பாடியுள்ள தமிழ்ப் பாசுரங்களை ஐயமின்றிக் கற்றுச் சொல்ல வல்லவர்கள்

இவ்வுலகுக்கு அரசராகிப் பின் திருநாட்டையும் ஆளப் பெறுவர்" என்று பலன் கூறி முடிக்கிறார். *"திருமலையை அடைவாயாக"* என்று ஆழ்வார் கூறிய அறிவுரைப்படி (அவரும்) அவர் நெஞ்சமும் அடைந்தது. ஆயினும் எம்பெருமான் காட்சியளிக்கவில்லை.

"பெருமானே! யான் உம் அடிமை; என் குற்றங் களைப் பொறுத்து அடியேனை ஆட்கொள்ள வேண்டும். இது தான் *"வாணிலா முறுவல்"* (1:6) என்னும் திருமொழி யில் ஆழ்வார் கூறியதன்றோ? எனின், மென்மையானோர் பலமுறை நீரை அள்ளி வெயில் காலத்தில் முகத்தில் இட்டுக்கொள்வது போல, இவரும் மீண்டும் தஞ்சம் புகு கிறார்.

"மூங்கில்கள் நிறைந்து, சோலைகள் சூழ்ந்து, மணம் வீசும் திருமலையிலே எழுந்தருளியுள்ள பெரு மானே! உறவு அல்லாதவரை உறவாக எண்ணித் துன்பப் பட்டேன். நாயினும் இழிந்த யான் உன்னை வணங்க வேண்டித் தஞ்சம் புகுந்தேன். அடியேனைக் குளிர நோக்கி அடிமை கொண்டருளுக"

*"தாயே தந்தையென்றும்... கொண்டருளே"* *–1:9:1*

"தாய், தந்தை, தம்பி, இருப்பிடம், பாதுகாப்பு, நண் பன், புகல் என்னும் எல்லாம் நாராயணனே ஆவான்" என் பது சுபாலோபநிடதம். எம்பெருமான் வினை வயப்படாத வனாய், திருநாட்டிலே அயர்வறும் அமரர்களுக்கு ஓலக் கம் கொடுப்பவனாய் இருப்பவன்.

அத்தகையவன் குழந்தை விழுந்த கிணற்றிலே ஒக்க விழுந்து எடுக்கும் தாயைப் போல, உயிர்கள் வருந்தும் இவ்வுலகில் வேங்கடத்தில் வந்திருக்கிறான். இது உயிர்களைக் காப்பதற்கே ஆகும்.

"வண்டுகள் நிறைந்த மலர்கள் உள்ள சோலைக ளாலே சூழப்பட்ட திருமலையில் எழுந்தருளியுள்ள என் னுடைய ஆனை போன்ற பெருமானே! நான் பல தீவினை களைச் செய்து நரகம் புகத்தக்கவனானேன். உன்னை அடைந்து உன் திருவடிகளை அடைக்கலமாகப் பற்றி னேன். அடியேனை ஆட்கொண்டருள வேண்டும்!

*"மானேய் கண்மடவார்... ஆட்கொண்டருளே"* *–1:9:2*

மேகங்கள் முழங்கும் குளிர்ச்சியும் பெருமையும் உடைய திருமலையில் எழுந்தருளி இருப்பவனே! குறிக் கோள் இல்லாமல் நான் பலரைக் கொலை செய்தேன். யாசகர்களுக்கு இன்சொல் சொன்னதில்லை. உன்னைக் கிட்டிப் பற்றினேன். அடியேனை ஆட்கொண்டருள்க.







*"கொன்றேன்... ஆட்கொண்டருளே...."* *–1:9:3*

"மண்ணில் படிந்த பெரிய மேகக் கூட்டங்கள் சேர்ந் திருக்கும் வழிகள் நிறைந்த திருமலையில் எழுந்தருளி யுள்ளவனே! நான் பல குலங்களில் பிறந்து இறந்து கெட் டேன்; நற்செயல் எதுவும் செய்யவில்லை. அத்தகைய நான் உன் திருவடியைப் பற்றினேன்; அடியேனை ஆட் கொண்டருள்க!"

*"குலந்தான்... ஆட்கொண்டருளே"* *–1:9:4*

"பாதுகாப்பாக அமைந்த வலிய மலைகளால் சூழப் பட்ட திருமலையில் கோயில் கொண்டுள்ள பெருமானே! என் தந்தையே! நான் பல பாவங்களைச் செய்து இளைத்து விட்டேன். உன் திருவடிகளை போற்றவும் ஆற் றல் உடையவன் அல்லேன். அடியேனை ஆட்கொண் டருள்க!



## வாசகர்களுக்கு அறிவிப்பு

பிரதி மாதம் ஸப்தகிரி மாத இதழ் உங்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் கிடைக்காமல் போனால் பிரதான ஆசிரியர் அலுவலகத்தை பணி நாளில் கீழ்காணும் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டால் இவ் இதழினை உடனே அனுப்பி வைக்கப் படும். நீங்கள் கீழ் குறிப்பட்ட விவரங்களை தொலைபேசி யில் தெரிவியுங்கள். உங்கள் சந்தா எண், உங்கள் முகவரி, உங்கள் பகுதி அஞ்சல் எண், உங்கள் கைபேசி எண்... சரியாக தெரிவியுங்கள்.

பிரதான ஆசிரியர் அலுவலக தொலைபேசி எண்: 0877-2264543

*"எப்பாவம்... ஆட்கொண்டருளே"* –1:9:5

எப்பாவம். 5 பெரும் பாவங்கள் : கொலை, கள் குடித்தல், பசுவைக் கொல்லல், அந்தணரைக் கொல்லல், பிறர் மனை விரும்பல்.

"வானளாவிய சிகரங்களைக் கொண்ட திருமலையில் எழுந்தருளி இருப்பவனே! ஐம்பூதங்களால் ஆன, புண் நிறைந்த உடலில் அகப்பட்டு மெலிந்து இளைத்தேன். உன் திருவடிகளைத் தஞ்சம் புகுந்தேன்; ஆட்கொண்டருள்க"

*"மண்ணாய் நீர்... ஆட்கொண்டருளே"* –1:9:6

"யானைகள் சேர்ந்திருக்கும் பூக்கள் நிறைந்த சோலைகளால் சூழப்பட்ட திருமலையில் எழுந்தருளியுள்ளவனே! நான் சிறுவனாக இருந்த போது பல கொடிய செயல்களைச் செய்தேன். பின் மற்றவர்க்காகப் பாடுபட்டுக் கெட்டேன். உன் திருவடிகளைத் தஞ்சம் புகுந்தேன். ஆட் கொண்டருள்க" (1:9:7).

"மரக் கொம்புகளிலிருந்து தேன் பெருகி ஒழுகும் குளிர்ந்த சோலைகளால் சூழப்பட்ட திருமலையில் கோயில் கொண்டுள்ள பெருமானே! பல பிறவிகள் ஏற்படுமாறு வினைகளைச் செய்து வைத்தேன். பெரிதும் துன்புற்றேன். உன்னைக் காண வேண்டி இப்பிறப்பில் உனக்குத் தக்கவன் ஆனேன். உன் திருவடிகளை அடைந்தேன். ஆட்கொண்டருள்க" (1:9:8). சோலைகளில் கட்டிய தேன் கூட்டிலிருந்து தேன் வழிவது போல மிகவும் நீசனான என்னிடம் உன் திருவருள் பாய்ந்துள்ளது. அதனால் வந்தடைந்தேன்."ஆச்சரியமான பண்புகளை உடையவனே! திருமகள் கணவனே! மலைக்குகைகளில் தேன் பெருகிச் சுனைகளில் புக, அங்கே தாமரை மலரும்படியான திருமலையில் வாழ்பவனே! நான் பற்றுக்கோடு இல்லாதவன் நான் பாவமே செய்து பாவியானேன். வேறு வழி ஏதும் அறியாதவன்; இவ்வாறு இருந்தும் உன் திருவடிகளை அடைந்தேன். ஆட்கொண் டருள்க. *"பற்றேல்... ஆட்கொண்டருளே"* –1:9:9

"யான் குற்றங்களுக்கு ஓர் இருப்பிடமாய் உள்ளேன்; என்னைக் காத்துக் கொள்ள ஒரு வழியும் அற்றவனாய் உள்ளேன்" (அஹிர்புத்ய சம்ஹிதை 37:10).

"ஏழுலகுக்கும் கண் போல, உயிர் போல அமைந்த மேக வண்ணன்; அமரர் வந்து வழிபடும் திருமலையில் உறைபவன்; வேதத்தால் போற்றப்பெறும் பெருமானைக் கலியன் அருளிய இப்பத்து பாசுரங்களையும் ஓதுவோர்க்குத் தீவினை இல்லையாம்."

*"கண்ணாய்.... பாவங்களே"* –1:9:10

தொடரும்...

## சிறுவர் பகுதி வினாக்கள்

1. பாதாள ஸ்ரீஸ்ரீநிவாசப் பெருமாள் எத்திவ்ய தேசத்தில் கோயில் கொண்டுள்ளார்?
2. திருமாலின் மூன்று தேவிமார்கள் யார், யார்?
3. கடந்த மூன்று யுகங்களாக மதுரையில் உள்ள பெருமாள் கோயில் எது?
4. கூடலழகர் பெருமாளை மங்களாசாசனம் செய்த ஆழ்வார்கள் யார்,யார்?
5. தமிழகத்திலேயே மிகப் பெரிய துவஸ்தம்பம் எக்கோயிலில் உள்ளது?
6. எக்கோயில் துவஜஸ்தம்பத்தில், நின்ற திருக்கோலத்தில் ஸ்ரீஆஞ்சநேயர் சேவை சாதிக்கிறார்?
7. ஆண்டாள் அவதரித்த திருநட்சத்திரம் யாது?
8. 14 திவ்ய தேசங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள நகரம் எது?
9. திவ்ய தேசங்களில் ஸ்ரீமஹாவிஷ்ணு, எந்தெந்த நிலைகளில் தரிசனம் தருகின்றார்?
10. தவழ்ந்து வரும் ஸ்ரீகண்ணனின் திருவுருவச் சிலை எக்கோயிலில் உள்ளது?

விடைகளுக்கு 50ம் பக்கம் பார்க்கவும்

தொகுப்பு : திருமதி. கே. ராஜலட்சுமி, நங்கநல்லூர்

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 40

**இடமிருந்து வலம்**


1. இப்பெருமாளை ராமனாகவும், தன்னை கோசலையாகவும் பாவித்து குலசேகராழ்வார் தாலாட்டுப் பாடிய தலம்...(9)
16. கம்பர் நம்மாழ்வாரைப் பற்றி இயற்றிய நூல்.... (9)

**வலமிருந்து இடம்**

2. திருவிடந்தையின் புராண காலப் பெயர்....(9)
4. வைகுண்ட ஏகாதசி அன்று கருட வாகனத்தில் முக்கோடி தேவதைகளுடன் பூலோகத்தை அடைந்து பக்தர்களுக்கு தரிசனம் அளிப்பவர்.....(5)
7. சப்த ரிஷிகளில் ஒருவர்....(6)
10. கண்ணனின் தாய்மாமன்....(4)
14. காஞ்சி ஸ்ரீவரதன் இவருக்கு கருட சேவையின் போது சோளிங்கரில் தரிசனம் கொடுத்ததால் இவர் பெயரிலேயே நடக்கும் சேவை.....(9)
18. இந்த ஊரில் பல்லிகள் ஒலிப்பதில்லை....(2)
19. கோல மகரிஷி தவம் செய்த இடம்....(4)

**மேலிருந்து கீழ்**

3. நாடாளும் மன்னர்களின் கிரீடத்தில் இருக்கும் லட்சுமி....(7)
4. ஆளவந்தாருக்கு தூதுவளைக்கீரை மூலம் தூது அனுப்பியவர்....(8)
6. பரசுராமர் தன் தாய் ரேணுகா தேவியை கொன்ற பாவம் நீங்க வழி பட்ட தலம்....(6)
9. திருப்பாணாழ்வார் பெருமாளை ...(4) வண்ணன் என்று ஆசையோடு அழைக்கிறார்.
20. புண்ணியம் செய்தால்....(4) ஏற்படும்.




**தொகுப்பு : திரு. எஸ். ராஜகுமார், சென்னை.**
8124930259
**விடைக்கு 41 ம் பக்கம் பார்க்கவும்.**

**கீழிருந்து மேல்**

5. ஸ்ரீராமர் வில் உடைத்த ஊர்....(3)
7. பஞ்ச பூதங்களில் ஒன்று.....(4)
8. ஏழு மோட்ச புரிகளில் ஒன்று....(4)
11. கும்பகோணத்தை சுற்றியுள்ள ஒன்பது வைணவத் தலங்களில் சூரியனுக்குரிய தலம்....(9)
12. கிருஷ்ணருக்கு பெயர் சூட்டியவர்....(7)
13. பெருமாள் கோயில்களில் கருவறை எதிரே கை கூப்பிய நிலையில் இருப்பவர்.....(6)
15. சக்கரத்தாழ்வானை ஆழ்வார்கள் இப்படி போற்றுகின்றனர்.... ......(8)
17. சப்த தான தலங்களில் ஒன்று....(7)
21. பித்ரு கடன் செய்ய இங்கும் செல்வர்.....(2)

ஆழ்வாராசாரியர்கள் காட்டும் வாழ்க்கை நெறிகள் - 24



திருப்பாணாழ்வாரின் திருவவதார நன்னாள் கார்த்திகை ரோகிணி. எம்பெருமானின் ஸ்ரீவத்ஸ அம்சமாக அவதரித்தவர்.

# அரங்கனைக் கண்ட கண்கள்

திரு.எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி, 9443439963

உறையூரில் அன்று வாழ்ந்து வந்த குடிகளில் பாணர் குடியும் ஒன்றாகும். இவர்கள் இசைக் கருவிகளை தயாரிப்பதிலும் இசைப்பதிலும் வல்லவர்கள். அந்தக்காலத்தில் இவர்கள் தாழ்ந்த குலத்தவர்களாகக் கருதப்பட்டனர். இவர்கள் கோயிலுக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

ஒரு நாள் பாணன் ஒருவன் அரங்கனின் மீது அருமையான பாடல் ஒன்றினை இசைத்துக் கொண்டே வயல்களின் வரப்பு வழியே சென்று கொண்டிருக்கும்போது ஓங்கி வளர்ந்திருந்த நெற்பயிர்களின் இடையிலே அழகான குழந்தையைக் கண்டான். கடவுள் திருவுள்ளம்தான் இது என்று குழந்தையை அன்போடு மார்பணைத்தபடி வீடு வந்து சேர்ந்தான். பாணனும் அவன் மனைவியும் தங்கள் பிள்ளையில்லாத குறை தீர்ந்ததாகக் கருதி எல்லையற்ற அன்புடன் குழந்தையை வளர்த்து வந்தனர். அந்தக் குழந்தைதான் திருப்பாணாழ்வார். அரங்கனின் மீது அப்பழுக்கற்ற பக்தி உடையவர். ஆழ்வாரின் திருவவதார நன்னாள் கார்த்திகை ரோகிணி. பகவானின் ஸ்ரீவத்ஸ அம்சமாக அவதரித்தவர்.

"சீரிய நான்மறைச் செம்பொருள் செந்தமிழாலளித்த
பாரியலும் புகழ்ப்பாண்பெருமாள்" என்பார் அமுதனார்.



அரங்கன் தமது மேனியழகை ஒவ்வொரு அவயமாகக் காட்டியருள, அதனை வேதாந்த சார விஷயமாக வர்ணித்து "அமலன் ஆதிபிரான்" எனத் தொடங்கும் பத்துப் பாசுரங்களைப் பாட ஆரம்பித்தார். பாடிய பத்துப் பாசுரங்களும் ரகசிய த்ரய அர்த்தத்தையும், அர்த்த பஞ்சகசாரார்த்தத்தையும் சொல்வதால் இப்பிரபந்தத்திற்கு அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும், வேதாந்த தேசிகரும், பெரிய வாச்சான் பிள்ளையும் அதி அற்புதமான உரைகளை அருளிச் செய்திருக்கிறார்கள். முதல் மூன்று பாசுரங்களின் அ உ ம என்ற முதலெழுத்துக்கள் வேதசாரமாக ஓங்காரத்தில் அடங்கியுள்ள எழுத்துக்களாய் இருப்பதிலிருந்து வேதாந்தசாரம் இப்பிரபந்தம் என்பது வெளிப்படைாகத் தெரியும்.



பிரமேயசாரம் எம்பெருமானுடைய திருவடியே என்பதை 5,6,7 ஆவது பாசுரங்களின் முதல் (பா து கை) எழுத்துக்களால் உணர்த்துகின்றார். நடுவில் உள்ள நான் காவது பாசுரத்தின் முதல் எழுத்தான "ச" பிரமாணசாரத் தையும் பிரமேய சாரத்தையும் இணைத்து வழங்கு கின்றது. பத்தாவது பாசுரமான *"அரங்கனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே"* என்று உருக்கமாகப் பாட, ஒளிமயமாகிய அவர் ஊன் உடம்பு இறைவனிடத் தில் அப்படியே புகுந்து ஐக்கியமானது. இனி அவர் பாடியருளிய அமலனாதிபிரான் பிரபந்தத்தின் சாரமான விஷயத்தைச் சற்று அனுபவிப்போம்.

வைணவர்களால் பெரிய கோயில் என்று போற்றப் படுவது திருவரங்கம். பெரிய பெருமாள் என்று ஆராதிக் கப்படுபவர் திருவரங்கநாதர். ஆழ்வார்கள் அனைவ ராலும் போற்றப்பட்ட புண்ணிய மூர்த்தி இவர். இப்படிப் பல்வகையாலும் சிறப்புற்ற திருவரங்க நாதரை திருவடி முதல் திருமுடி வரை பாதாதி கேசமாக வர்ணித்த ஆழ்வார், நிறைவாக அவன் சமுதாய சோபையான முழு அழகையும் அற்புதமாகப் பாடி, அவனோடு லயித்தார். அந்த நிறைவான பாசுரம் இது.

*"கொண்டல் வண்ணனைக் கோவலனாய்*
*வெண்ணெய்*
*உண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை*
*அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக்*
*கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே!"*

–அமல.10

இனி, இந்த பாசுரத்தின் அர்த்த பாவத்தை கொஞ்சம் அனுபவிப்போம். கொண்டல் வண்ணன் என்று பெரு மாளை ஆசையோடு அழைக்கிறார். மழைக்குரிய மேகம், கருமையுடன் திரண்டு வரும் போது வாடிய பயிர்கள் எல்லாம் வாட்டம் நீங்குகிறது.

தேடிய மா முதலாகிய இறைவன் திருவரங்கக் கருவறையில் தன்னை ஆழ்வாருக்குக் காட்டும்போது வாட்டம் நீங்குகிறார் ஆழ்வார். கொண்டல் வண்ணனை என்று அவனுடைய பரம கருணையைச் சொன்னவர், கோவலனாய் என்று அடுத்து அவனுடைய எளிமையை யும் எண்ணுகிறார். கண்ணன் பிறப்பதற்கு முன் ஆய்ப் பாடியிலே தயிர் கடைந்து வெண்ணெய் எடுப்பார்கள். என்ன புண்ணியம்? அனுபவிக்க ஆள் இல்லை. வெண்ணெய், தாழியில் திரண்டு வீணாகத் தரையில் வழி யும். கண்ணன் பிறந்த பின்தான் வெண்ணை வீணா வதில்லை.

*"கானாயன் - கடிமனையில் தயிருண்டு நெய்பருக நந்தன் பெற்ற ஆளாயன் கண்ணன்".*

பெரிய பெருமாளின் திருவாய் இன்றைக்கும் வெண்ணெய் வாசத்தோடு இருக்குமாம். வெண்ணை ஆய்ச்சியர் கைபட்டது. ஆய்ப்பாடியிலே இடைச்சிகள் வைத்திருந்த வெண்ணெயைக் கவர்ந்தான். இங்கே ஆழ்வாரின் உள்ளத்தைக் (வெண்ணெயைக் கவர்ந்தது போல்) கவர்ந்தான். ஆழ்வாருடைய உள்ளம் பெரிய பெருமாளுக்கு நவ நீதம் ஆயிற்று என்பார் ஸ்வாமி தேசிகன். ஞானம் பிறக்குமுன் உள்ளம் நம்முடையது. ஞானம் பிறந்தபின் உள்ளம் இறைவனுடையது.

அதென்ன கவர்ந்தான். அவன் கவர்ந்ததை ஆழ்வார் அறிய வில்லையா...? ஆயர்பாடியிலே என்ன நடந்தது தெரியுமா? உறிகளிலே வெண்ணெய் வைத்து அதனைச் சுருக்குக் கயிற்றில் கட்டி, யாருக்கும் தெரியாத இடத்தில் தொங்கவிட்டு இருப்பார்கள். அது இருக்குமிடம் யாருக்கும் தெரியாது என்பதால் கள்ளக்கயிறு என்று அந்தக் கயிற்றுக்கு பெயர். ஆனால் அந்த உறியை எடுத் தது தெரியாது. கள்ளக் கயிறு உருவியது தெரியாது.

கண்ணனின் கை வண்ணத்திலே கலயம் வெறுங்கலயமாக இருக்கும். கலயமிருக்க வெண்ணெய் களவு போனது அங்கே! (கிருஷ்ணாவதாரத்திலே). இங்கே ஆழ்வாரின் உடல் இருக்கிறது. உள்ளம் கவரப்பட்டு விட்டது. இதைத்தான் **''உள்ளம் கவர்ந்தானை''** என்று அழகுறப்பாடுகிறார் ஆழ்வார்.

இப்படி கவர்ந்து சென்றவன் சாதாரணமானவனா? அண்டமாம் எண்டிசைக்கும் ஆதியான நீதிதேவன் அல்லவா அவன்? சராசரங்களுக்கெல்லாம் தலைவன்.

பாரினை உண்டவன். பின் உமிழ்ந்தவன். பரவாசுதேவன். கண்ணிக் குறுங்கயிற்றால் கட்டுண்டானாகிலும் இமையோர்க்கும் எண்ணற்கரியவன். இங்கே சுவாமித்துவமும் ஸ்வாதீனமும் பேசப்படுகிறது. அண்டர் என்பதற்கு இடையர் என்றும் பொருள் உண்டு.

அங்கே அண்டர்கோனான அவனை வணங்க பிரம்மாதி தேவர்கள் தவமாய் தவமிருக்க, இங்கே எளியனாய் ஆயர் குடிலிலே வெண்ணெயைக் களவு கண்டு சுகம் காண்கிறானே, அதனை நினைத்து வியந்து போகிறார் ஆழ்வார்.

யோசித்துப் பார்க்கிறார். அவன் யார்? அரங்கன். அதுவும் நேரில் எதிரில்.

அவதிப்படும் உயிர்கள் தங்களைக் காப்பதற்கு யாருமில்லை என்று நினைத்து விடாதபடி, அவர்களைக் காப்பதற்கென்றே இந்த பொன்னி சூழ் திருவரங்கத்தில் கிடையாய் கிடக்கிறான் என்பதால் **''அணி அரங்கன்''** என்று அழைக்கிறார் ஆழ்வார். அது மட்டும் அல்ல அமுதம் போன்றவன். அமிழ்தம் – அமுதம் மிக உயர்வான பொருள்.

தேவர்களும் அசுரர்களுமாகத் திருப்பாற்கடலைக் கடைந்தார்கள். திருமால் இதற்குப் பேருதவி செய்கிறார். திருமால் அருளால் தேவர்கள் அமுதத்தைப் பெறுகிறார்கள். அது உயர்ந்த பொருளா... என்ன? அமுதம் உண்ட தேவர்களுக்கும் கூட காலக்கிரமத்தில் அழிவு வரத்தானே செய்கிறது. நித்தியப் பரம் பொருளான ஸ்ரீமந் நாராயணனே எதிரிலே இருப்பதை அறிந்தும், அவனை அடைய முடியாத அல்லது அடைய விரும்பாத – அஞ்ஞானிகளாக ஆகிவிட்ட தேவர்கள். திருப்பாற்கடல் கடைசலில் பெற்ற உப்புச் சாற்றையல்லவோ பயனாகப் பெற்றார்கள். அப்படியானால் உண்மையான அமுதம் எது? ஸ்ரீமந்நாராயணன் என்ற மூல புருஷனுக்கும் வேராக விளங்கும், பரம்பொருளின் அம்சத்துடன் அர்ச்சாரூபமாக யுகம் யுகாந்திரமாக எழுந்தருளியிருக்கும் திருவரங்கச் செல்வன் அல்லவா?

குறைந்தது அமுதத்தினை தேவர்கள் படாதபாடு பட்டுப் பெற்றனர். உயர்வான உண்மை அமுதமோ ஆழ்வாருக்கு எடுத்துப் பருகு என்று தானே வந்தது. தானே வந்த அமுதம் மட்டுமல்ல எடுத்துத்தானே தந்த அமுதம் அரங்கன். அமுதம் சாப்பிட்டவர்களுக்குப் பசிக்காது; பாலையும் சோற்றையும் நாடாது; உயர்ந்த விஷயத்தை ரசித்த பிறகு கேவல விஷயங்கள் சுவைக்காது.

நித்ய தரித்திரனானவன் நிதியைக் கண்டாப்போலே என்பார் ஸ்வாமி தேசிகன் முனிவாஹன போகத்தில். எல்லா திவ்ய தேசங்களையும், எல்லா அவதார குணங்களையும் இணைத்துச் சேவித்த திருப்தியில் தம்மை மறந்து அற்புதமாக திருப்பாணாழ்வார் பாடிய பத்து பாசுரங்கள் நம் பிறவி நோயை தீர்க்கும்.

திருப்பாணாழ்வார் வாழ்வு காட்டும் நெறி இது தான். பகவானை உணரவும், பக்தி செலுத்தவும் பிறந்த குலம் தடையாக இருக்க முடியாது. சுயநலமற்ற பக்தனைத் தானே தேடி வந்து தன்னை உணர வைக்கிறான் பகவான்.

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.

**வாழ்க்கை நெறிகள் முற்றும்.**





# புத்தக மதிப்புரை

புத்தகத்தின் பெயர் : பெரியவாச்சான்பிள்ளை அருளிய ஸ்தோத்ர ரத்ன வ்யாக்யானம் (ப்ரமாணாத் திரட்டுடன் கூடியது)

பதிப்பாசிரியரின் பெயர் : டாக்டர் மாடபூசி வரத ராஜன்.

புத்தகம் கிடைக்குமிடம் : டாக்டர். மா. வரதராஜன்
ஸ்ரீவரதராஜ பிளாட்ஸ் எண். 3, 27, தெற்கு மாட வீதி,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005.

விலை : ரூ.300/–

ஆளவந்தார் அருளிய ஸ்தோத்ர ரத்னத்திற்குப் பெரியவாச்சான்பிள்ளையின் வ்யாக்யானம் 1976ஆம் ஆண்டு ஸ்ரீமான் உ.வே. எஸ். கிருஷ்ண ஸ்வாமி அய்யங்காரால் இரண்டாவது பதிப்பாக வெளியிடப்பட்டது. இப்புத்தகம் இப்போது கிடைப்பதில்லை. ஆகவே ஆசிரியர் மறுபதிப்பாக இப்புத்தகத்தை வெளியிட்டார். இப்போது வெளியிடப்பட்ட புத்தகம் (2019) பல சிறப்புகளுடன் ஆசிரியர் பதிப்பித்துள்ளார்.

முதல் அட்டையில் ஸ்ரீபெருந்தேவித் தாயார் சமேத ஸ்ரீபேரருளாளன் (காஞ்சி) சேவை சாதிக்க, அந்த திவ்ய தம்பதிகளின் திருவடிவாரத்தில் ஸ்ரீஆளவந்தாரும், ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளையும் அலங்கரிக்கின்றனர். அடுத்த பக்கங்களில் புத்தூர் ஸ்வாமிகளும், ஆசிரியரின் ஆசாரிய ஸ்வாமிகளும் காட்சியளிக்கின்றனர். இந்த ஸ்தோத்ர ரத்னத்துக்கு இரண்டு தனியன்களே நடைமுறையில் உள்ளன. மூன்றாவது தனியனான "ஸம்ஹாநநாம் சபவ" என்பது ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவத்தில் (ப.165) உள்ளதை இப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். "விஷயஸூசிகை" என்று ஒவ்வொரு சுலோகத்திலுள்ள கருத்தினைச் சுட்டிக் காட்டியுள்ளார். அவ்வாறு 65 சுலோகங்களில் உட்பொருளைத் தெரிந்து கொள்ளலாம்.

தெலுங்கு லிபியில் (1914) அச்சிடப்பட்டிருக்கும் ஸ்தோத்ர ரத்ன வ்யாக்யான ஸ்ரீகோசத்தில் 65–வது சுலோக வ்யாக்யான பாடபேதம் காட்டப்பட்டுள்ளது. இதுவரை எவராலும் குறிக்கப்பட வில்லை. ஆசிரியரின் ஆசார்ய ஸ்வாமி காலக்ஷேபம் சாதித்தபோது "ஏதோ பாடபேதம் உள்ளது" என்று மட்டும் தெரிவித்துள்ளார். அச்சமயம் இந்த ஸ்ரீகோசம் கிடைக்கவில்லை. ஆசிரியர் மிகவும் அரும்பாடுபட்டு இப்பாட பேதத்தை பதிப்பித்துள்ளார் (ப.107).

ஸ்தோத்ர ரத்னத்தின் ஸாரம் என்பதனை வெளியிட்டுள்ளார் (ப.108). தமது ஆசார்ய ஸ்வாமி காலக்ஷேபம் ஸாதித்தபோது ஏடுபடுத்தி அரும்பதமும் அதன் விளக்கமும் காணமுடிகிறது (பக்.186–196). பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானத்தில் உதாஹரித்த வடமொழி நூல்களும், பிரமாணத்திரட்டில் இடம் பெற்ற வரிசை எண்களும் குறிக்கப் பெற்றுள்ளன (பக்.197–199). ஸ்தோத்ர ரத்ன சுலோக அகர வரிசை அட்டவணையும் இடம் பெறும் (பக்.200–201),

ஸ்ரீஉ.வே. எஸ். கிருஷ்ண ஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி 1999 இல் வெளியிட்ட மூன்றாம் பதிப்பில் காட்டிய அதி பாடமும் பாடபேதங்கள் (பக்.202–203, புதுப்பட்டு திருவேங்கடாசார்ய ஸ்வாமி 1914–இல் பதிப்பித்த வ்யாக்யானத்திலுள்ள பாடபேதம் (ப.204), ஈடுமுப்பத்தாறாயிரப் படியில் நம்பிள்ளை ஸ்தோத்ர ரத்னத்தை உதாஹரித்த இடங்கள் (ப.205), பன்னீராயிரப் படியில் வாதிகேஸரி ஜீயர் ஸ்வாமி ஸ்தோத்ர ரத்னத்தை உதாஹரித்த இடங்கள் (ப.206), இறுதியாக சதுச்ச்லோகீ வ்யாக்யான அவதாரிகையில் பெரியவாச்சான் பிள்ளை குமாரர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனாராச்சான பிள்ளை உதாஹரித்த ஸ்தோத்ர ரத்ன சுலோகங்கள் (ப.206).

இப்படிப்பட்ட பல சிறப்புகளோடு இப்புத்தகத்தை மிக மிக அரும்பாடுபட்டு வெளியிட்டுள்ளதை நோக்குங்கால் ஆசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளிலும், வ்யாக்யானங்களிலும் ஆசிரியருக்குள்ள ஈடுபாடு சொல்லற்கரியது. ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவர் இல்லங்களில் இருக்க வேண்டிய புத்தகம். தினமும் பாராயணத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது மிக மிக அவசியம்.

– டாக்டர். கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி.

ஓம் லோகமாத்ரே நம:

# திருமாலை அறியாதார் திருமாலை அறியார்

–திரு. வெ.இராமமூர்த்தி,
சென்னை.


சோழ நாட்டில் மண்டங்குடியில் அந்தணர் குலத்தில் எட்டாம் நூற்றாண்டில் அவதரித்தவர் தொண்டர் அடிப் பொடி ஆழ்வார். இவர் இயற்பெயர் விப்ர நாராயணர். வேதங்களைக் கசடறக் கற்று, பன்னிரண்டு திருநாமங்கள் தரித்து, திருஅரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீரெங்கநாதரிடம் பக்தி பூண்டு, அவருக்கு பெரியாழ்வாரைப் போல மலர்க்கைங்கர்யம் செய்ய, அழகிய நந்தவனம் அமைத்து, மலர் தொடுத்து, நாள்தோறும் மாலை அணிவிப்பவர். பிரம்மசரியம் பூண்டு அரங்கனையே தொழுபவர்.

**தேவதேவியின் மயக்கும், திருமகள் நோக்கும் :**

ஒருநாள் திருவரங்கத்திற்கு அருகில் உள்ள திருக்கரம்பனூர் திவ்ய தேசத்தில் வாழ் அரசு நாட்டிய தேவதேவி என்ற தேவதாசி, இளைப்பாற பூங்காவிற்கு வந்தாள். அங்கு நாராயணரோ, அவளை ஏறெடுத்தும் பார்க்காமல் மலர்ப்பறிப்பதிலேயே கருமமே கண்ணாயினார். தன் அழகில் மயங்கா அம்மானிடரை மயங்க வைப்பேன் என்று சூளுரைத்து, துறவி வேடம் பூண்டு, நாரணரிடம் தன் அம்மா தன் குலத்தொழிலில் ஈடுபடுத்தலால், வரைவின் மகளிராக (விலைமாது) பாவத்தொழிலைச் செய்ய விரும்பவில்லை என்றும், தன் வாழ்வுக் கடைத்தேற, அவரிடமே தங்கி, பராமரிப்பு பணி செய்ய வேண்டினாள். அவரும் இசைந்தார். குடிலுக்கு வெளியே ஆறு மாதம் தங்கிப் பணி செய்தாள். பெருமழை பொழிந்த அன்று, மழையில் நனைந்து, தவித்தலால், அவரும் உள்ளே வா என, தேவதேவியும் தன் ஈர மேனியையும், அங்கப் பொலிவையும் காட்டி மயக்கினாள். அன்று முதல் அரங்கனையும் மறந்து, பிரிந்த அவள் இல்லத்து வாயிலிலே தவம் கிடந்தார். இந்த இழிநிலை உணர்ந்த திருமகள் திருமாலிடம் தன் அடியவனைத் திருத்த பரிந்துரை செய்தார். அரங்கனும் ஒரு வேலைக்காரனாய் கோயில் பொன் வட்டில் ஒன்றை எடுத்துச் சென்று தேவதேவியின் அம்மாவிடம் கொடுத்தார். பிறகு களவு போன பொன்வட்டில் தேவதேவியின் வீட்டில் இருப்பதைக் கண்டு சோழ மன்னன் மூவரையும் சிறைபடுத்தினான். திருவரங்கன் அரசன் கனவில் தோன்றி, தன் அடியவனைத் திருத்திப் பணி செய்ய பொன்வட்டிலைக் கொடுத்ததாகவும், உண்மையில் இவன் கள்வனல்ல என்றுரைத்தார். மன்னரும் அவரை விடுவித்தார். தூய்மை பெற்ற இவர், இதனை *''சூதனாய்க் கள்வனாகித் தூர்த்தரோடு இசைந்த காலம், மாதரார் கயற்கண் என்னும் வலையுள் பட்டு அழுந்து வேனை போதரே என்று சொல்லிப் புந்தியில் புகுந்து தன் பால், ஆதரம் பெருக வைத்த அழகன் ஊர் அரங்கம் அன்றே''* என்று பதிவு செய்கின்றார்.

*''இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்''*

திருமாலை – 45 பாசுரங்கள்; திருப்பள்ளி எழுச்சி – 10 பாசுரங்கள். அரங்கனுக்கு தமிழில் அருளிய திருப்பள்ளி எழுச்சி முதலாகும். திருமாலையில் மானிடர்கள் வாழும் நாட்கள் நூறாண்டு எனினும், ஐம்பது ஆண்டு,



உறக்கத்திலும், மீதமுள்ள ஐம்பது ஆண்டுகளில் இளமை, நோய், வாழ்வியல் துன்பங்களில் கழிகின்றன. ஆதலால் பிறவி வேண்டாம் என்று கூறுகின்றவர், இந்த அரிய மானிடப் பிறவியில் அரங்கனின், பச்சை நிறத் திருமேனியையும், பவளவாய், கமலச் செங்கண்களை யும் தரிசிக்கும் இப்பேறு, இச்சுவையை விட்டு வானுலகு ஆள்கின்ற பேறு கிடைப்பினும், வேண்டேன் என்று மானுடப் பிறவியின் மாண்பை உணர்த்துகின்றார்.

**இறை அனுபவம் :**

காட்டினான் திருஅரங்கம் உய்வதற்கு உய்யும் வண்ணம் என்று வைணவர் பெரிய கோயிலான திருவரங்கப் பெருமாளை கற்றீனம் மேய்த்த கழல் இணையையே பணிய வேண்டுகின்றார்.

திருவரங்கம், வண்டினம் முரலும் சோலை, மயிலி னம் ஆளும் சோலை, குயிலினம் கூவும் சோலை, தன் னைத் திருத்திய அழகன் ஊர் என்றும், தன் இரும்பு நெஞ்சத்தையும் உருக்கி கரும்பு போல் இனிக்கும் திருவரங்கத்து நாதன், கங்கையிற் புனிதமாய காவிரி நடு வில் அரவின் மீது பள்ளி கொண்டருளும் பாங்கினைப் பாடுகின்றார், இப்புறந்தொழா மாந்தர்.

*"குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி கடல் நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு உடல் எனக்கு உருகுமாலோ! என் செய்கேன்? உலகத்தீரே!"* குடதிசை – மேற்கு, குண திசை – கிழக்கு, நான்கு திக்குகளும் பெரிய பெருமாளின் படுக்கையால் பயன் உறுகின்றனவாம். குரங்குகள் மலைகளைக் கட லில் போட்டு, இராமன் இலங்கை செல்ல சேது பந்த னத்தைக் கட்டின.

அணில் தன் பங்கிற்கு கடலிலே குளித்து, பின்பு ஈரத்தில் தன் உடலை மண்ணில் புரட்டி, ஒட்டிய மணலைக் கடலில் உதிர்த்து அணை கட்ட உதவியது. அதுபோன்று எத்தொண்டையும் செய்ய வில்லை. உன் பாதத்தை பற்றவில்லை.

மனத்திலே தூய்மையும், வாயில் ஓர் இன்சொல் இல்லை. எந்தையே, ஆவியே, அமுதே! எனக்கு இனிக் கதி என் சொல்வாய், பாவியாகிய நான் உன்னைத் தவிர பிறரை பற்றேன், என்று அரங்கனுக்குத் துவளத் தொண் டும், அவர் அடியார்களுக்கு ஆட்படுத்த வேண்டுகிறார், தொண்டால் உய்வோம்.

**ஓம் பத்மப்ரியாயை நம:**


திருமலை திருப்பதி தேவஸ்தானம்,
திருப்பதி

## திருமலை புனித யாத்திரையை இனிதாக்குவது எப்படி?

* திருமலைக்கு செல்லும் முன்பே இரயில் மற்றும் பேருந்து டிக்கெட்டுகள், தங்கு வசதிகள் மற்றும் சேவை டிக்கெட்டுகளுக்கு முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.
* திருப்பதியில் தங்கியிருக்கும் போது ஓய்வு நேரத்தில் உள்ளூர் ஆலய தரிசனம் செய்யுங்கள்.
* திருமலைக்கு நடந்து செல்பவர்களுக்கு வசதியாக திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து அலிபிரி மற்றும் ஸ்ரீவாரிமெட்டு வரை இலவசப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.
* யாத்திரிகர்கள் தங்கள் உடைமைகளை அலிபிரி மற்றும் ஸ்ரீவாரிமெட்டு அடிவாரத்தில் உள்ள கௌண்ட்டரில் செலுத்திவிட்டு, மலை ஏறிச்சென்று திருமலையில் இலவசமாக திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.
* தி.தி.தேவஸ்தானம், மலைவழிச் சாலைகளில் பழுதடையும் வாகனங்களை சரிபார்ப்பதற்கு ரோந்து பழுதுபார்ப்பு வாகனத்தை ஏற்பாடு செய்துள்ளது.
* உங்கள் திருமலை யாத்திரையை விடுமுறை அல்லாத நாட்களில் தொடருங்கள்.
* தங்கு வசதிக்காக உங்கள் குடும்ப உறுப்பினர் அனை வரும் சி.ஆர்.ஓ. அலுவலகத்தில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு நபர் மட்டும் க்யூவரிசையில் காத்திருக்கலாம். மற்றவர்கள் சி.ஆர்.ஓ. அலுவலகத் திற்கு பக்கத் தில் உள்ள யாத்திரிகர்கள் வசதிக் கூடத்தில் தங்கி ஓய்வு எடுக்கலாம். அங்கு அனைத்து வசதிகளும் உள்ளன.
* தகவல் அறிவதற்கு, இரயில் நிலையம், விமான நிலை யம், ஆர்.டி.சி. பேருந்து நிலையம், அலிபிரி பேருந்து நிலையம், சத்திரங்கள், அலிபிரி டோல்கேட் மற்றும் ரேணிகுண்ட்டா இரயில் நிலையத்தில் உள்ள தகவல் மையங்களை அணுகுங்கள்.
* திருமலை புனிதம் மற்றும் பரிசுத்தத்தை பாதுகாத்திட தாங்கள் தேவஸ்தானத்துடன் ஒத்துழையுங்கள்.

- செயலாட்சி தலைவர்



# தி.தி.தே. ஆலய தரிசனம் (பாக்கேஜ் டூர்)



## ஆந்திர மாநில சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கழகம்

### 1. திருப்பதி உள்ளூர் ஆலய தரிசனம் (தினமும்)

| டிக்கெட்டின் விலை | பேருந்து புறப்படுமிடம் | முறை | புறப்படும் நேரம் |
|---|---|---|---|
| ஏ.சி. அற்றது–ரூ.100/–<br>ஏ.சி. –ரூ.150/– | ஸ்ரீநிவாசம் & விஷ்ணு நிவாசம் கட்டிடத்தொகுதி, திருப்பதி | 6 (ஆறு) | காலை 6 மணி முதல் மதியம் 1 மணி வரை |
| (10 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டணம் கிடையாது) | | | |

### தரிசிக்கும் ஆலயங்கள்

1. ஸ்ரீ பத்மாவதி தாயார் திருக்கோயில் - திருச்சானூர்
2. ஸ்ரீஅகஸ்தீஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - தொண்டவாடா
3. ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - ஸ்ரீநிவாசமங்காபுரம்
4. ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - திருப்பதி
5. ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருக்கோயில் - திருப்பதி

### 2. திருப்பதி அருகிலுள்ள ஆலய தரிசனம் (தினமும்)

| டிக்கெட்டின் விலை | பேருந்து புறப்படுமிடம் | முறை | புறப்படும் நேரம் |
|---|---|---|---|
| ஏ.சி. அற்றது–ரூ.250/–<br>ஏ.சி. –ரூ.350/– | ஸ்ரீநிவாசம் & விஷ்ணு நிவாசம் கட்டிடத்தொகுதி, திருப்பதி | 2 (இரண்டு) | காலை 8 மணிக்கு மற்றும் காலை 9 மணிக்கு |
| (10 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டணம் கிடையாது) | | | |

### தரிசிக்கும் ஆலயங்கள்

1. ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி திருக்கோயில் - கார்வேடி நகரம்
2. ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி திருக்கோயில் - நாகலாபுரம்
3. ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - நாராயணவனம்
4. ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - அப்பளாயகுண்ட்டா
5. ஸ்ரீ கரியமாணிக்க ஸ்வாமி திருக்கோயில் - நகரி
6. ஸ்ரீஅன்னபூர்ணி உடனுறை காசி விஸ்வேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - புக்கை
7. ஸ்ரீபள்ளிகொண்டீஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - சுருட்டப்பள்ளி

**மேலும் விவரங்களுக்கு**

**0877-2289123, 2289120 / 121, 9848007033**



# ஒப்புநோக்கு



# திருப்பாவை திருவெம்பாவை

– திருமதி. மைதிலி சம்பத், செகந்திராபாத், 9395343545.

**மார்கழி மாதச் சிறப்பு :**

மார்கழி என்பது தேவர்களின் புலர் காலைப் பொழுதாகும். புலர் காலையில் செய்யும் எந்தச் செயலுக்கும், அப்பொழுதினைப் போல் ஒரு அழகு உண்டன்றோ...?

**மதுர பக்தி :**

இறைவனை அடியார்கள் தாயாக, தந்தையாக, மதலையாக, நண்பனாகவெல்லாம் போற்றி அனுபவித்தாலும் மதுர பக்தி எனும் நாயகா நாயகி பாவ பக்திக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. ஏனெனில் ஆண்டவன் ஒருவனே புருஷன், மற்ற அனைத்து ஜீவ ராசிகளும் ஸ்த்ரீகள் என்பது நம் மதத்தில் முக்கியமான ஒரு தத்துவம். எனவே, அதை வலியுறுத்தும் "சிருங்கார பக்தி" நம் மதத்தில் மிக அற்புதமான விஷயமாகக் கருதப்படுகிறது.

திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி ஆகியவை இந்த விதமான பக்தி பாவத்திலேயே எழுதப்பட்டுள்ளன. இவற்றை மார்கழி மாதத்தில் பாடி கண்ணனையும், சிவனையும் துதித்தல் முறையே வைணவ, சைவ அடியார்களின் சிறந்த பக்தி முறையாக உள்ளது. திருப்பாவை வைணவத்தில் சிறந்த ஆழ்வாரான ஸ்ரீஆண்டாள் எனப்படும் கோதை நாச்சியாராலும், திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி சைவ சமயக் குரவர் நால்வரில் ஒருவரான மாணிக்க வாசகப் பெருமானாலும் எழுதப்பட்டுள்ளது. அனைவரும் கூடி நன்றாயிருத்தலும், நன்கு மழை பெய்து நாடு செழித்தலும் இவற்றில் வலியுறுத்தப்படுகிறது.

**வழிபாட்டில் உறுதி :**

இரண்டு தொகுதியிலுமே திண்ணமாகத் தெரிகிறது. *"உன் அடியாரே எங்கணவர் எனும் வரம் தந்தால் என்ன குறையும் இல்லோம்"* என்னும் மாணிக்கவாசகர் 19–ம் பாடலில் *"நின் அன்பர் எம் கணவரானால் சூரியன் எங்கெழுந்தால் என்ன?"* என்கிறார். எங்கள் பக்தி தளர்வடையலாகாது எனவும் வேண்டுகிறார். கோதை நாச்சியாரோ *''எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும் உன்தன்னோடு*

உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்'' என்று உறுதியாகச் சொல்லுகிறார். ''வேறு ஆசைகளை நீயே நீங்கச் செய்'' என்றும் வேண்டுகிறார்.



இரண்டிலுமே நீராடுதல் (சரீர சுத்தி), இறைவனைத் தொழுதல் (ஆன்ம சுத்தி) ஆகியவை வலியுறுத்தப்படுகின்றன. இரண்டிலும் முதலில் அனைவரையும் எழுப்புதல், பின் தோழியர் அனைவரும் நீராடுதல், பின்பு இறைவனைத் துதித்தல் எனும் அமைப்பே உள்ளது. சற்றே அவற்றை நாமும் கவனித்து மகிழலாம்.

''யசோதை இளஞ்சிங்கம், ஓங்கி உலகளந்த உத்தமன் மாயன், மாமாயன், ஆயர்குலத்தின் அணி விளக்கு, நாற்றத்துழாய்முடி நாராயணன், முகில் வண்ணன், பங்கயக்கண்ணன், பெரியாய் பூவைப் பூவண்ணா, குறைவில்லா கோவிந்தன்'' என நாராயணனைப் பலவாறு குறிப்பிட்டும் விளித்தும் மகிழ்கிறார் ஆண்டாள். ''கஞ்சன் வயிற்றில் நெருப்பென நின்ற, நெடு மாலே'', என அழைத்து, "மல்லரை மாட்டிய தேவாதி தேவன் கருணையுள்ளவன், வல்லமை பொருந்தியவன், விரோதிகளுக்கு நெருப்பானவன், உலகினில் அவதார புருஷனாக நின்ற ஜோதி, தேவர்களுக்கு துயர்வரும் முன் துடைப்பவன், எதிரிகளை வெல்லும் கோவிந்தன்" என்றும் துதிக்கிறார். வாமன, ராம, கிருஷ்ண அவதாரங்களைப் போற்றுகிறார் ஆண்டாள்.

மாணிக்கவாசகர் சிவனை அனுபவிக்கும் அழகையும் சற்றே கவனிப்போம். அவன் "ஆதி அந்தம் இல்லாத அருட்பெரும் ஜோதி, விண்ணோரும் அவனைப் போற்ற, தாம் தகுதியற்றவரோ எனத் தயங்கும்படி இருப்பவன். விண்ணுக்கொரு மருந்து, வேத விழுப்பொருள், மண்ணுலகும், விண்ணுலகும் கூட அவனை அறியமாட்டா. கருனைக் கடலான வன், உவமை இல்லாக் கருணையன்", என்றெல்லாம் 8 பாடல்கள் வரை துதிக்கிறார்.

பின்னர், "பழமையிலும் பழமையானவன், புதுமையிலும் புதுமையானவன், திருவடிகள் பாதாளங்கள் ஏழுக்கும் கீழும், திருமுடியோ எல்லாப் பொருட்களுக்கும் முடிவானது, தொண்டர் உள்ளம் இலங்குபவன், மூவுலகும் படைத்துக் காத்து பின் அழித்தலை விளையாட்டாகவே செய்பவன் என வேதம் அவனை கொண்டாடுகிறது. திருவண்ணாமலையானின் திருவடிகளை வணங்கும்போது, தேவர் மணி முடிகளும், சூரியனும், நட்சத்திரங்களும் தங்கள் ஒளியையிழக்கின்றன என்றெல்லாம் புகழ்பவர், திருவெம்பாவை இறுதிப்பாட்டில் இன்னும் அவனைப் பலவிதமாய்த் துதித்துப் போற்று கிறார். ''தென்னா'' என அழைக்கும் அவர், இன்னும் சிவனை ''ஆரமுதே, அங்கண் அரசே, விண் ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருளே, கண்ணகத்தே நின்று களிதரும் தேனே, கடல் அமுதே, கரும்பே, அடியார் எண் அகத்தாய், உலகிற்கு உயிர் ஆனாய்'' என்றெல்லாம் அழைத்து மகிழ்கிறார். திருப்பள்ளி எழுச்சியிலோ "நீ கருணாநிதிப் பர்வதமும், ஆனந்த சாகரமும் ஆவாய். உனைத் துதிப்பவர்களுக்கு மட்டும் விளங்குபவன், பிறவிக்கடலிலிருந்து விடுவிப்பவன், அழிவில்லாப் பொருள்" என்றெல்லாம் போற்றுகிறார்.



''மனதிற்கினியான்'' என்று கோதை அழைத்து மகிழ்ந்தால், மாணிக்கவாசகர் ''கண்ணுக்கினியான்'' எனப் பாடிக் களிகிறார். திருப்பாவையின் 6–ம் பாடலிலிருந்து 16–ம் பாடல் வரை தோழிகளை ''எழுந்திரு, கதவைத் திற, நீராடு, மாயவனைப் பாடு'' என்பதே அமைந்திருக்கின்றன. திருவெம்பாவையிலும் 1–ம் பாடலில் இருந்து 8–ம் பாடல் வரை தோழிகளை "நீராடப் போகலாம் என எழுப்பி, பின் இறைவனைத் துதிக்கலாம்" என்று சொல்லுவதாக அமைந்துள்ளது.

இவற்றின் சுவை என்னவென்றால் மிக அழகான விளிச் சொற்கள், காலைப் பொழுதின் அழகைப் பற்றிய வர்ணனை, மழையின் அவசியம்,



அழகு ஆகியவை. திருப்பாவையில் "நேரிழையாய், அருங்கலமே, பொற்கொடி, புனமயிலே, போதரிக் கண்ணினாய், எல்லே இளங் கிளியே" என்றெல்லாம் தோழிகள் அழைக்கப்படுகிறார்கள். நப்பின்னையையோ "பந்தார் விரலி, கந்தம் கமழும் குழலி, மைத்தடங் கண்ணி" என்றெல்லாம் அழைக்கிறார்கள். திருவெம்பாவையிலும் "நேரிழையாய் உண்டு, இன்னும் முத்தன்ன வெண்ணகையாய், ஒள் நித்தில நகையாய், ஏலக்குழலி, மானே" என்றெல்லாமும் அழைக்கப் படுகிறார்கள் தோழியர்கள். செல்லமாக வசவுச் சொற்களில் அழைத் துக்கொள்வதும் இரண்டிலுமே காணக்கிடைக்கிறது. நாணாதாய், பேய்ப்பெண்ணே, படிறீ (வஞ்சகி) போன்றவை உதாரணங்கள்.

அழகான உரையாடல் வடிவில் அமைந்தவை திருப்பாவையின் 15 பாசுரமும், திருவெம்பாவையின் 4–வது பாசுரமும் ஆகும். மங்கல வார்த்தைகளான, *''வாழி வளரு தியோ''* போன்ற வையே பயன்படுத்தப்பட்டுள்ளன. தோழிகள் எழுந்திருக் காததால் கோபப்பட்டு நித்திரையைக் கடிந்து கொள்வதும் இரண்டிலும் உள்ளது. திருவெம்பாவை 7–வது பாடலில் *''துயிலின் பரிசென்றும்'',* திருப்பாவை 10–ம் பாடலில் *''கும்ப கர்ணன் தந்ததா? ஈதென்ன பேருறக்கம்''* என்றும் தோழியர்கள் கடிந்து கொள்கிறார்கள்.

**விடியலின் அழகு :**

திருப்பாவை 6–ம் பாசுரத்தில் பறவையினம் சப்தித்தலும், கருடாரூடன் பெருமாள் கோயிலின் வெண்சங்கின் சப்தத்தையும் சொல்கிறார் ஆண்டாள். 7–ம் பாசுரத்தில் ஆய்ச்சியர் மத்தினால் தயிரரவம் செய்யவும், அவர்கள் கழுத்துத் தங்கக் காசும், குண்டுகளும் கலகலக்கவும் வரும் ஓசை பற்றி சொல்லு கிறார். 8–ம் பாசுரத்தில் கீழ்வானம் வெளுத்து எருமைகள் மேயத் தொடங்குதலும் சொல்லப்படுகின்றன. மாணிக்கவாசகர் திருப்பள்ளி எழுச்சியில் 3–ம் பாடலில் "பறவைகள் கூவ, நட்சத்திர ஒளி குறைய, உதயத்து ஒளி கூடவும்" என்கிறார்.



**நீராடும் அழகு :**

திருவெம்பாவையில் நீராடும் அழகு மிக மிக அழகாக வருணிக்கப்பட்டுள்ளது. "11–ம் பாடலில் தடாகத்தில் இறங்கி "முகேர்" எனும் ஒலி உண்டு பண்ணி மூழ்கிக் குளிப்பதாகவும், 12–ம் பாடலில் வளையலும் ஒட்டியாணமும் பெருமிதமாக ஒலிக்கவும், அழகிய கூந்தலின் மேல் வண்டுகள் முழங்கவும், மலர் நிறைந்த பொய்கையில் குளிப்பதாகவும், 13–ம் பாடலில் சிவ சக்தி சொரூபமான மடுவில் குதித்து வளையல்களும் சிலம்பும் ஒலிக்க, தனங்கள் பூரிப்படைய, நீரும்பொங்க நீராடுவோம் என்றும், 14ம் பாடலில் தோடுகள், மற்ற பொன்னாபரணங்கள் ஆடவும், 15–ம் பாடலில் பூச்சூடியுள்ள கூந்தல் ஆடவும், நாடி வந்த வண்டுக் கூட்டங்கள் ஆடவும் குளிர்ந்த நீரில் மூழ்குவோம், இறைவன் பெயர் சொல்லி நீராடுவோம்" என்கிறார்.

திருப்பாவை 3–ம் பாசுரத்தில் *''ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடுகயல் உகள''* என்றும், *''குடம் நிறைக் கும் வள்ளல் பெரும் பசுக்கள்''* என்றும், *''எருமைகள் பால் சொரிந்து நந்தகோபன் இல்லம் சேறாகும்''* என்றும் நாட்டின் செழிப்பு சொல்லப்படுகிறது. மாணிக்கவாசகர் *''கமலங்கள் மலரும் வயல்''* என்று கூறுகிறார். திருப்பாவையில் 4–ம் பாசுரம் *''ஆழிமழைக் கண்ணா''* மழையின் அழகைக் கூறுகிற தென் றால், திருவெம்பாவையில் 16–ம் பாடல் *''முன்னிக் கடலை''* மழையின் வருணனையாகும். இந்தப் பாடல்களில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் உவமைகள் அற்புதமான அழகு. திருப்பாவை 22–ம் பாசுரத்தில் கண்ணனின் கண்கள் சந்திர சூரியனுக்கு ஒப்பானவை எனக் கூறப்படுகிறது. 23–ம்

| திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி<br>**2020, ஜனவரி மாத விழாக்களும், பண்டிகைகளும்** | |
|---|---|
| 6 | வைகுண்ட ஏகாதசி. |
| 7 | ஸ்வாமி புஷ்கரணி தீர்த்த முக்கோட்டி. |
| 5-9 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம். |
| 7-13 | ஆண்டாள் நீராட்டோத்ஸவம். |
| 14 | போகிப் பண்டிகை, போகித்தேர். |
| 15 | பொங்கல் பண்டிகை. |
| 16 | கானும் பொங்கல், கூரத்தாழ்வான் திருநட்சத்திரம். |
| 25-பிப்3 | தேவுனி கடபா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |

பாசுரத்தில் மாரிமழை முழைஞ்சில், உறங்கிய சிங்கம், உணர் தலை வருணித்து கண்ணன் துயிலுணரும் காட்சியை ஒப்பிடுவதும் மிக அழகு.

அதேபோல் திருவெம்பாவையில் 2-ம் பாடலில் *''தென்னா என்னா முன்னம், தீசேர் மெழுகொப்பாய்''* என்ற உவமைகள் மிக அழகாக அமைந்துள்ளது. இரட்டைக் கிளவிகளின் அழகை திருவெம்பாவையில் முதல் மற்றும் 4-ம் பாடலிலும் காணலாம், (விம்மி விம்மி, என்னே என்னே ,சிவனே சிவனே, உணராய் உணராய்).

இப்பாடல்களில் வரும் தமிழ் சொற்கள் பல ஆராய்ச்சிக்கு ஏற்புடையதாகும். மலையாள மொழியில் “நென்னலே” என்றால் நேற்று, தெலுங்கில் “ஓடிப்போதல்” என்றால் தோற்றுப்போதல் எனப் பொருள். அவை அதே அர்த்தத்திலேயே உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. இச்சொற்கள் தமிழின் உதரத்திலேயே அம்மொழிகள் பிறந்ததைத் தெரியப்படுத்துகிறது. “தெரியல்” என்று மாலையின் ஒரு பெயர் திருப்பாவையில் கண்டால், “தார்” என்னும் மற்றொரு பெயர் திருவெம்பாவையில். இதுபோல் வழக்கொழிந்த தமிழ்ச் சொற்கள் பலவற்றை இப்பாடல்கள் மூலம் அறியலாம்.

இப்பாடல்களின் அழகைப் புகழ்ந்து சொல்லிக் கொண்டே போனால், எல்லையின்றி விரியும். இறைவனைத் துதித்து இருவரும் கேட்கும் வரமே அவன் அருகாமைதான். மொத்தத்தில் மார்கழி முழுவதும் இரண்டு பாடல் தொகுப்புகளும் பாடப் பெற்றுவருவதால் பேதமின்றி இரண்டின் அழகையுமே பொருள் உணர்ந்து, படித்து ஆனந்தப்படலாம். அவரவர் இஷ்ட தெய்வத்தை துதித்து திருவருள் பெற்று இன்புறலாம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## சர்வ தரிசனம் டோக்கன்

- நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் திருமலையப்பனை தரிசிப்பதற்கு “சர்வதரிசனம் டோக்கன்” முறையினை அமல்படுத்தப்பட்டுள்ளது.
- க்யூ வரிசையிலும், கம்பார்ட்மெண்ட்டிலும் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.
- சர்வ தரிசனம் டோக்கன்கள் பெறுவதன் மூலம் நிர்ணியிக்கப்பட்ட நேரத்தில் திருமலையப்பனை தரிசிக்கலாம்.
- திருப்பதியில் இரயில் நிலையத்திற்கு எதிரில் உள்ள விஷ்ணு நிவாசம், இரயில் நிலையத்திற்கு பின்புறமுள்ள கோவிந்தராஜ ஸ்வாமி 2,3 சத்திரங்கள், ஸ்ரீநிவாசம், அலிபிரியில் உள்ள பூதேவி கட்டிடத் தொகுதி, ஆர்.டி.சி. பேருந்து நிலையத்தில் உள்ள கௌண்ட்டரில் பக்தர்கள் இலவசமாக சர்வ தரிசனம் டோக்கன்கள் பெற்றுக் கொள்ளலாம்.
- குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஆதார் அட்டையை கொண்டு வருதல் வேண்டும். ஆதார் அட்டை இல்லாத பட்சத்தில் வாக்காளர் அடையாள அட்டை காண்பித்தல் வேண்டும்.
- டோக்கன்கள் பெற்ற பக்தர்கள் டோக்கனில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்குள் நாராயணகிரி கார்டனை அடைந்து திவ்ய தரிசன கட்டிடத் தொகுதி வழியாக ஸ்வாமியை தரிசனம் செய்யலாம்.
- இடைப்பட்ட காலத்தில் திருப்பதி, திருச்சானூர், ஸ்ரீநிவாச மங்காபுரம், அப்பளாயகுண்ட்டா போன்ற தி.தி.தே. ஆலயங்களுடன் பிற புண்ணிய திருத்தலங்களையும் தரிசியுங்கள்.
- ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை இல்லாத பக்தர்கள் வழக்கம் போல் வைகுண்டம் கட்டிடத் தொகுதியில் காத்திருந்து ஸ்வாமியை தரிசிக்கலாம்.

– செயலாட்சித்தலைவர்.

சிறார் வாக்கு

# இராமாயணத்தில் ரசித்த சகோதரத்துவம்





செல்வன்
ரித்திக்
நாராயணன்,
ஐதராபாத்

ஸ்ரீமத்ராமாயணம், அண்ணன் – தம்பி உறவுகள் .... எப்படி இருக்கக்கூடாது என்றும்.... எப்படி இருக்க வேண்டும் என்றும்.... தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. ஸ்ரீராமன், பரதன், லக்ஷ்மணன், சத்ருக்கனன் ஆகிய நால்வரும் சகோதரர்கள்.

இளம் பருவத்தில் தொடங்கி, இறுதி வரை லக்ஷ்மணன் அண்ணன் ராமனுடன் இணைந்தே வாழ்கிறான். வனவாசம் செல்கையில்.... கூடவே செல்கிறான். தனது மனைவியையும் விட்டு விட்டு... பதினான்கு ஆண்டுகள்!... ஸ்ரீராமனுக்கும் சீதா தேவிக்கும் சேவை செய்வது ஒன்றே லக்ஷியமாக இருந்தான்.

இதுபோலவே பரதனுடன் சத்ருக்கனனும் இணைந்தே இருந்தான். தமையனைப் போலவே... பரதன், தானும் மரவுரி தரித்து, ஸ்ரீராமபிரானுடைய பாதுகைகளுக்கு பட்டாபிஷேகம் செய்து, வனவாசத்திலிருந்து தமையன் திரும்பி வரும் வரை அயோத்தியாவினுள் நுழையாமலேயே நந்தி கிராமம் என்ற இடத்தில் 14 ஆண்டுகள் வாழ்ந்தான். இவை அனைத்துமே “சக(ஒரே) உதரத்தில்” உதித்த அண்ணன் தம்பிகளுக்குள் காணப்படும் நிகழ்வுகள்.



“குகன்” எனப்படும் படகோட்டி ஸ்ரீராமனிடம் அளவற்ற பக்தி கொண்டவன். 14 ஆண்டுகள் ஸ்ரீராமனுடனே இருக்க மன்றாடினான். தந்தையின் வாக்கினை தலை மேல் கொண்ட ஸ்ரீராமன் இதனை ஏற்கவில்லை. ஆனால் குகனை அணைத்து, நீயும் எனது ஐந்தாவது சகோதரன் என ஆரத்தழுவி, நால்வராக இருந்த நாங்கள் இன்று முதல் ஐவரானோம்... என்று அன்பைப் பொழிந்தான்.



தன் அண்ணன் வாலிக்கு பயந்து சுக்ரீவன் ரிஷ்யமுக பர்வதத்தில் ஒளிந்து வாழ்ந்தான். ஆஞ்சநேயரின் துணை கொண்டு ஸ்ரீராமரை சந்தித்து சரணடைந்தான் சுக்ரீவன். ஸ்ரீராமன், சுக்ரீவனை, காப்பதாக உறுதி கூறி, சுக்ரீவனை தனது ஆறாவது சகோதரனாக அங்கீகரித்தார். அன்பைப் பொழிந்தார். சுக்ரீவனும், சகோதரன் என்று தன்னை அன்புடன் தழுவிய ராமனுக்கு, சீதா தேவியை தேடி கண்டு பிடிப்பதற்கு தனது படைகளுடன் முழு உதவி செய்கிறான்.

கும்பகர்ணனும், விபீஷணனும், இலங்கையை ஆண்ட ராவணேஸ்வரனுடைய இரண்டு தம்பிகளாவர். சீதா தேவியை கவர்ந்து வந்த ராவணனிடம்... அவனது தம்பி கும்பகர்ணன் தைரியமாக நீதியை எடுத்து கூறி, சீதையை மீண்டும் ஸ்ரீராமனிடம் சேர்ப்பித்து விடுமாறு வேண்டுகிறான். இதற்கு ராவணன் மறுப்பு தெரிவித்த நிலையில். அண்ணனுக்கு துணை நின்று போரில் உயிர் இழக்கிறான்.

தர்மவானான விபீஷணன் அண்ணனுக்கு நீதியையும் தர்மத்தையும் எடுத்துக் கூறுகிறான். ராவணன் மிக்க சினம் கொண்டு, விபீஷணனை நாட்டை விட்டு துரத்தி விடுகிறான். துரத்தப்பட்ட விபீஷணன் ஸ்ரீராமனிடம் வந்து சரணடைகிறான். ஸ்ரீராமன் விபீஷணனை தனது ஏழாவது சகோதரனாக ஏற்று, அடைக்கலம் தந்து, ராவணனை அழித்து இலங்கை மன்னனாக பட்டாபிஷேகமும் செய்து வைக்கிறான்.

ஆத்மார்த்தமான அன்பை பொழிந்து நம்மை அண்டியவர்கள் அனைவரையும் சகோதர பாசத்துடன் ஏற்று உதவிட வேண்டும் என்ற ஒரு அருமையான தர்மம், நிகரற்ற நீதி பளிச்சிடுகிறது அல்லவா?

ஸ்ரீராமபிரானது குணத்தை அனுபவித்த சுவாமி விவேகானந்தர்... அமெரிக்க நாட்டுக்கு சென்ற போது... “சகோதர சகோதரிகளே” என்று அழைத்து... அகில உலகத்தாலும் கவரப் பட்டார் அல்லவா? அவசியம் பின்பற்றுவோம். அவதார புருஷன் ஸ்ரீராமனின் குணங்களை....!!!





# திவ்ய திருத்தலம் திருமலை

தெலுங்கு மூலம் : திரு. ஜெ. பாலசுப்பிரமண்யம்
தமிழாக்கம் : திரு. வி. வேங்கடரமணா, 9885701696

## வைகுண்டத்தை விடுத்து வந்த லக்ஷ்மிதேவி


தான் கொலுவீற்றிருக்கும் எம்பெருமானின் திருமார்பினை எட்டி உதைத்த பிருகு மஹரிஷியை தண்டிக்காமல், அவரை ஆதரித்து அனுப்பிய செயலைக் கண்டு, எம்பெருமான் மீது மிகுந்த கோபம் கொண்டு, லக்ஷ்மி தேவி வைகுண்டத்தை விடுத்து பாதாள உலகத்திற்குச் சென்று, கபில மஹாமுனி ஆசிரமத்தை அடைந்து தவம் புரிந்தார். சில நாட்களுக்குப் பின் தேவதைகளின் வேண்டுகோளுக்கிணங்க பூலோகத்தில் கொல்ஹாசுரன், கரவீரன் என்ற அரக்கர்களை அழித்து கொல்ஹாபுரத்தில் ஸ்ரீமஹா லக்ஷ்மியாக கொலுவீற்றார்.

மகாவிஷ்ணுவும் லக்ஷ்மி தேவி இல்லாத வைகுண்டத்தை விடுத்து, அவளைத் தேடிச் செல்ல, அவர் கண்ணிற்கு லக்ஷ்மி தேவி எங்கும் புலப்படவில்லை. இறுதியில் ஸ்வாமி ஆதிவராஹ க்ஷேத்திரத்தை அடைந்தார். உண்ண உணவும், இருக்க இடமும் இல்லாமல் தவித்த விஷ்ணுவிற்கு, இத்தலத்தில் புஷ்கரணி தீர்த்தமும், புளிய மரத்தின் கீழ் ஒரு புற்றும் தென்பட்டது. குகை போன்று இருந்த அப் புற்றில் வாழ்ந்து வந்தார்.

புற்றில் மறைந்து வாழ்ந்து வந்த பரந்தாமனின் துயரைக் கண்ட பிரம்மதேவனும் பரமசிவனும் கொல்ஹாபுரத்தை அடைந்து, ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு எம்பெருமானின் நிலமையை விவரித்து முறையிட்டனர்.

ஆனால் மஹாலக்ஷ்மியோ அவர்களின் வார்த்தைகளை ஏற்கவில்லை. எம்பெருமானின் பசியையாவது போக்குவதற்கு சம்மதியுங்கள் என இருவரும் கூற, லக்ஷ்மி தேவியும் சம்மதிக்க, பிரம்மதேவன் பசுவாகவும், சிவன் கன்றாகவும், லக்ஷ்மி தேவி இடையர் குலப் பெண்ணாகவும் மாறி, வராஹ க்ஷேத்திரத்தை அடைந்தனர். பின்னர் லக்ஷ்மி தேவி பசுவையும், கன்றுவையும் அந்நாட்டு மன்னனாகிய சோழ மன்னருக்கு விற்று விட்டு அங்கிருந்து சென்று விட்டார்.

மன்னனின் பசுக்கூட்டத்தில் புதிதாக வந்த இந்த பசுவும், பசு மேய்ப்பாளர்களுக்குத் தெரியாமல் நாள்தோறும் வராஹ க்ஷேத்திரத்தில் உள்ள புற்றின் அருகே சென்று, தன் மடியில் உள்ள பாலை சுரந்து விட்டு வந்தது. ஒரு நாள் கூட வீட்டிற்கு பால் தரவில்லை. கோபாலகர்கள் ஏன் இப்பசு பால் கொடுப்பதில்லை, இதனுடைய பால் எல்லாம் என்ன ஆகிறது என்பதனை அறிய, மறுநாள் அப்பசுவினை பின் தொடர்ந்தனர். அப்பசுவோ மலை மேல் உள்ள ஒரு புற்றில் பால் சுரந்து கொண்டு இருந்தது. அதனைக் கண்ட இடையர்கள் (கோபாலர்கள்) கோபம்





ஓம் பத்மநாபப்ரியாயை நம:

கொண்டனர். அதன் மேல் கோடாரியை வீசினர். பசு மிரண்டு மறு புறத்தை அடைந்தது. அப்பொழுது ஏற்பட்ட சத்தத்தைக் கேட்டு புற்றில் இருந்த ஸ்ரீநிவாசர் மேலே எழுந்தார். அந்த கோடாரி அவரின் நெற்றியில் பலமாக பட்டு இரத்தம் வழிந்தது. இரத்தம் வழிதலுடன் இருந்த ஸ்ரீநிவாசரை கண்ட இடையர்களும் அங்கேயே மரணமடைந்தனர்.

இவ்விஷயத்தை அறிந்த சோழ மன்னன் புற்றின் அருகே வந்து நாங்கள் செய்த குற்றத்தை மன்னியுங்கள் என்று ஸ்ரீநிவாசரை வேண்டினான். செய்த தவற்றிற்கு தண்டனை தவறாது என்று ஸ்ரீநிவாசர் சோழ மன்னனுக்கு சாபமிட்டார்.

மன்னனின் கெஞ்சலைக் கேட்டு மனமிறங்கிய ஸ்வாமி, விரைவில் ஆகாச ராஜனின் மகளான பத்மாவதி தேவியுடன் என் திருமணம் நடக்கவுள்ளது. அப்பொழுது எனக்கு காணிக்கையாக ஒரு தங்கக் கிரீடத்தை கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கும் போது உம் சாபம் நீங்கும் என்று கூறினார்.

இப்பூலோகத்தில் முதன் முறையாக எம்பெருமானை இடையர்கள் தரிசித்ததால் தான், திருமலையில் கலியுகம் முடியும் வரை நாள்தோறும் ஸ்வாமியின் ஆலயத்தில் முதல் தரிசனம் இடையருக்கு என்று ஸ்ரீநிவாசர் வரமளித்தார்.

அதன்பின் அங்கே உலவிக் கொண்டிருந்த ஸ்ரீநிவாசருக்கு வராஹ ஸ்வாமி தென்பட்டார். வராஹ ஸ்வாமியிடம் தன் கதையைக் கூறி, தான் இருப்பதற்கு 100 அடி இடத்தை தானமாகக் கேட்டார். அதற்கு கைமாறாக தன்னை தரிசிக்க வரும் பக்தர்கள் முதலில் வராஹ ஸ்வாமியை தரிசித்த பிறகே தன்னை தரிசிப்பர். அதே போன்று முதல் பூஜை, முதல் நைவேத்தியம் வராஹ ஸ்வாமிக்கு நடைபெறும் என்று ஸ்ரீநிவாசர் ஒப்புதல் அளித்தார்.

அதற்கு ஒப்பு கொண்ட வராஹ ஸ்வாமி, ஸ்ரீநிவாசர் சேவையில் வகுளமாதேவியையும் நியமித்தார். வகுளமாதா யார்? அவரை



வராஹ ஸ்வாமி ஸ்ரீநிவாசரின் சேவைக்கு எதற்கு நியமித்தார் எனபதனை அறிந்து கொள்ள வேண்டும் என்றால் துவாபர யுகத்தின் கதையை அறிந்து கொள்ள வேண்டும்.

### வகுளமாதாவே யசோதை :

துவாபர யுகத்தில் குழந்தை கிருஷ்ணனை வளர்த்து பெரியவன் ஆக்கியவர் தாய் யசோதை! குழந்தை கிருஷ்ணனின் லீலைகளை தரிசித்த யசோதை, அவரின் திருமணத்தை காணமுடியாமல் போனது.

தாயின் வருத்தத்தைக் கண்ட ஸ்ரீகிருஷ்ணர், அம்மா! கலியுகத்தில் நான் ஸ்ரீநிவாசராக அவதரிப்பேன். ஆகாச ராஜாவின் மகளான பத்மாவதி தேவியை நான் திருமணம் செய்து கொள்வேன். அந்த திருமணம் உங்கள் முன்னிலையில் நிகழ்த்தப்படும் என்று வரமளித்தார். அந்த யசோதையே இந்த வகுள மாதா!

வகுளமாதா ஸ்ரீநிவாசரை தன் குழந்தை போன்று பார்த்துக் கொண்டார். ஸ்ரீநிவாசர் மற்றொரு முறை தாய்ப் பாசத்தினை பெற்றார்.

ஒரு நாள் ஸ்ரீநிவாசர் வேட்டையாட காட்டிற்குள் சென்றார். அங்கே காட்டு யானை ஒன்று ஆகாச ராஜனின் மகளை துரத்திக் கொண்டு வந்தது. அந்த யானையின் பிடியிலிருந்து பத்மாவதி தாயாரைக் காப்பாற்றி அவர் மீது மிகுந்த அன்பு கொண்டார். பத்மாவதி தேவியுடன் இருந்த தோழிகள் அவரை கல்லால் அடித்து விரட்டினர். இரத்த காயத்தோடு வந்த ஸ்ரீநிவாசரைப் பார்த்து வகுளமாதா கவலையுற்றார். நடந்தவற்றைக் கூறி, பின் பத்மாவதி தேவியை நான் விரும்புகிறேன் என்றும், அதனால் ஆகாச ராஜாவிடம் சென்று திருமணத்தைப் பற்றி பேசுமாறும் தம் தாயான வகுளமாதாவிடம் முறையிட்டார். மலையில் வாழும் தான் எங்கே? ஆகாச ராஜாவின் மகள் எங்கே? இருவருக்கும் திருமணம் நடக்குமா என்று சந்தேகப்பட்ட வகுள மாதாவிற்கு, அம்மா துவாபர யுகத்தில் நீர் யசோதை, நான் கிருஷ்ணன் என்று கூறினார்.



அதுமட்டுமின்றி ஆகாச ராஜாவின் மகளான பத்மாவதி த்ரேதா யுகத்தின் வேதவதி என்றும் கூறினார்.



## வேதவதியே பத்மாவதி

சீதா, ராமர், லக்ஷ்மணர் வனவாசம் செய்த சமயத்தில் இராவணன் சீதையை அபகரித்தான். அச்சமயத்தில் அக்னி தேவர், இராவணா இந்த பெண் யார்? என்று கேட்டார். சீதாதேவி என்று கூறினான் இராவணன். இவள் சீதாதேவி இல்லை. உண்மையான சீதா என்னிடம் உள்ளாள் என்று வேதவதியை காண்பித்தார்.

இராவணாசுரன் அக்னியிடம் இருந்த வேத வதியை கூட்டிக் கொண்டு சென்றார். இலங்கையில் சீதாவிற்கு பதிலாக வேதவதி இருந்தார். மறுபடியும் இராவண சம்ஹாரம் முடிந்த பிறகு சீதா அக்னி பிரவேசம் செய்த சமயத்தில், அக்னியில் இருந்து சீதா தேவி வடிவத்தில் உள்ள இரண்டு பெண்கள் வெளியே வந்தனர்.

ஆச்சரியப்பட்ட ஸ்ரீராமச்சந்திரனிடம் அக்னி தேவர், ராமச்சந்திரா இவ்வளவு நாள் இலங்கையில் இருந்தது இந்த வேதவதி தான். உண்மையான சீதாதேவி இதோ இங்கே உள்ளார் என்று கூறினார். உடனே சீதாதேவி ராமரிடம் எனக்காக இலங்கையில் பல துன்பங்களை அனுபவித்த வேதவதியை திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்டார்.

இந்த அவதாரத்தில் தான் ஏகபத்னி விரதத்தையுடையவன், கலியுகத்தில் வேங்கடவனாக அவதரிக்கும் போது இந்த வேதவதி ஆகாசராஜாவின் மகளாக பத்மாவதி தேவியாக அவதரிப்பாள். அப்பொழுது அவளை திருமணம் செய்து கொள்கிறேன் என்று சீதாதேவிக்கு ஸ்ரீராமர் வரம் அளித்தார். அந்த ஸ்ரீராமரே நான். வேதவதியே இந்த பத்மாவதி!

வேதவதியும் லக்ஷ்மி தேவியின் அவதாரமே. மயன் என்ற வேத பண்டிதன் வேதத் தியானம் செய்து கொண்டிருந்த போது ஊர்வசி என்ற அப்சரசு தென்பட்டார். அவர்களுக்குப் பிறந்தவளே இந்த வேதவதி. வேதப் படனம் செய்யும்போது பிறந்தவர் ஆனதால் வேதவதி என்று பெயரிடனர். அந்த வேதவதியே இந்த பத்மாவதி என்று வகுளமாதாவிடம் ஸ்ரீநிவாசர் விவரித்தார்.

திருமலை வைபவம் தொடரும்...

ஓம் நமோ வேங்கடேசாய

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# கோவிந்தம் பரமானந்தம்



## திருவேங்கடமுடையான் ஆலயத்தில் நித்ய சேவைகள்






# கோவிந்தம் பரமானந்தம்

## திருவேங்கடமுடையான் ஆலயத்தில் நித்ய சேவைகள்



சுப்ரபாதம்



சுப்ரபாதம்



நித்ய கல்யாணம்



கொலுவு


தோமாலை சேவை


சஹஸ்ர கலசாபிஷேகம்


திருப்பாவாடை சேவை


அஷ்டதள பாதபத்மாராதனை


சஹஸ்ரநாம அர்ச்சனை


அபிஷேகம்


ஏகாந்த சேவை

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்



திருமலையில் 09-11-2019 அன்று அதிகாலையில் நடைபெற்ற கைசிக துவாதசி மஹோத்ஸவம்



ஆ.மா. சித்தூர் மாவட்டம், சந்தரகிரியில் ஸ்ரீகோதண்டராமஸ்வாமி ஆலயத்தில் அக்டோபர் 23 முதல் 25ம் தேதி வரை
நடைபெற்ற அஷ்டபந்தன, பாலாலய ஜீர்ணோத்தரண, மஹாசம்ப்ரோக்ஷணத் திருக்காட்சிகள்



நவம்பர் 07 முதல் 10 வரை ஆ.மா. ஒய்.எஸ்.ஆர். கடப்பா மாவட்டம், தேவுனி கடபாவில்
ஸ்ரீலக்ஷ்மிவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் நடைபெற்ற அஷ்டபந்தன மஹாசம்ப்ரோக்ஷணத் திருக்காட்சிகள்



தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுவில் பதவி அடிப்படையில் உறுப்பினராக இந்து அறநிலையத் துறை செயலாளர் திருமதி வேமூரி உஷாராணி ஐ.ஏ.எஸ். அவர்களுக்கு (10.11.2019) திருமலை ஆலயத்தில் தி.தி.தே.கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு. தர்மாரெட்டி அவர்கள் பதவிப்பிரமாணம் செய்து வைத்து, சித்திரப்படத்தை வழங்கினார்



தி.தி.தே. பர்டு மருத்துவமனையில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் உதவியாளர்களுடன் தீபாவளி கொண்டாட்டத்தில் பங்கு கொண்ட தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர்(திருப்பதி) திரு. பி. பசந்த் குமார் ஐ.ஏ.எஸ். அவர்கள்



**முன்னுரை :**

*"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும்*
*ஒண்டொடி கண்ணே உள"* – குறள் – 1101

என்பது வள்ளுவரின் வாக்கு. நம்முடைய ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, செவி இவற்றிற்கு இன்பம் தருவது பெண்மை. எனவேதான் நமது பெரியோர்கள் "பெண்கள் நமது கண்கள்" என்றும், "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" என்றும் கூறிச் சென்றனர். இவ்வுலகமே பெண்களின் படைப்புகளால்தான் இயங்கி வருகின்றது. ஆகையால் தான் நமது நாட்டை தாய்நாடு, தாய்பூமி எனவும், நதிகளின் பெயர்களை பெண்களின் பெயர்களாகவும் வைத்திருக்கின்றனர். "திருப்பாவையில் பெண்கள்" எனும் தலைப்பில் பெண்களின் ஒழுக்கம், பொது நோக்கு, இறைபக்தி, அன்பு, விட்டுக் கொடுத்தல், இல்வாழ்க்கை போன்றவற்றை எடுத்துக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஒழுக்கம் :**

*"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்"* (குறள் – 131). தனிமனிதனுடைய ஒழுக்கம் நமது உயிரைவிட மேலாகக் கருத வேண்டும். *"வையத்து வாழ்வீர்காள்!"* (திருப்பாவை – 2) இப்பாடலில் வையத்து வாழ்வீர் காள் என்று அழைக்கிறாள் ஆண்டாள். வாழ்க்கை வாழ்வதற்கே. அதுவும் வகையுற வாழ்வதற்கே என்பர் பெரியோர். எப்படியாவது வாழலாம் என்று எண்ணாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழும் குறிக்கோளுடைய வாழ்க்கையாகும்.

**பொது நோக்கு :**

இவ்வுலகில் தாம் மட்டும் நல்லபடியாக வாழ்ந்தால் மட்டும் போதாது, பிறரும் நல்ல முறையில் வாழ வேண்டும் என ஆசைப்படுவது பொது நோக்காகும். அதாவது சுயநலமாக இல்லாமல் பொது நலமாக வாழ்தல் நன்று.

*"தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து"* (திருப்பாவை – 3), *"நீரின்றி அமையாது உலகு"* என்பது வள்ளுவரின் வாக்கு. இவ்வுலகத்தில் மழை பெய்யவில்லை எனில் புள், பூண்டு, ஏன் மனித இனமே அழிந்து விடும். முதலாவதாக நாடு செழிக்க, நல்லபடியாக இருக்கச் செய்வது மழை. எனவே தான் தெய்வப் புலவர் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துக்கு அடுத்து வான் சிறப்பு எனும் அதிகாரத்தை வைத்தார். நாட்டில் எந்தத் தீங்கும் ஏற்படாமல் இருக்க வேண்டும். கள்வராலும், கொலை மேற்கொள்பவராலும் நாட்டில் தீங்கு ஏற்படலாம். வறுமையிலும், நோயிலும் வாழ்க்கை வற்றியும், நொடித்தும் போய்விடலாம். எனவே ஒரு நாடு தீங்கற்று இருக்க வேண்டியது அவசியமாகும். தீங்கில்லாமல் ஒரு நாடு இருந்துவிட்டால் போதும். அந்த நாட்டில் திங்கள் மும்மாரி பெய்தால் தான் வளம் வந்து சேரும். பழங்காலத்தில் வேதியற்கோர் மழையென்றும், நீதி உடையோர் அரசர்க்கோர் மழையென்றும், கற்புடைய மகளிர்க்கோர் மழையென்றும் சொன்னார்கள். ஒன்பது நாள் வெயிலும் ஒரு நாள் மழையுமாக



# திருப்பாவையில் பெண்கள்

– முனைவர் உ.கிருஷ்ணன், மீஞ்சூர்.







மாதத்தில் மூன்று நாள் மழை பொழிய வேண்டும் என்றார்கள். ஏனென்றால் மூன்று நாள் தொடர்ந்து அல்லும் பகலுமாக மழை பெய்து நாடெல்லாம் வெள்ளக்காடாகிப் போனால் அதனால் மக்களும் விலங்குகளும் துன்பமே அடைவர். தொடர்ந்து மாதத்தில் இருபத்தேழு நாட்களும் வெயிலே அடிக்குமானால், அந்த வெயிலின் கொடுமை தாங்காமல் மக்களும் துன்புறுவர்.

எனவே ஒன்பது நாள், வெயிலும், ஒரு நாள் மழையும் ஒரு மாதத்தில் அமையுமானால் அந்த மாதத்தில் வெப்பமும் தட்பமும் – கொடுமையும், குளிர்ச்சியும் அளவாக அமையும். இதைத்தான் “திங்கள் மும்மாரி பெய்து” என்கின்றனர்.

**மழை பெய்யும் விதம் :**

மழை பெய்தால் தான் நாடு செழிக்கும் என்கிறார் ஆண்டாள். இதையே *‘‘ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி’’* (திருப்பாவை 3) என்கிறார். மார்கழி மாதத்தில் பாவை நோன்பை மேற்கொண்டால், திங்கள் மும்மாரி பெய்து நாடு செழிக்கும், அதன் வழி நீர்வளம் மிகுந்து, நெல்வளம் சிறந்து, பசு வளம் பரந்து, பால் வளம் பல்கிக் காணப்படும்.

*‘‘ஆழி போல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து*
*தாழாதே சார்ங்க முதைத்த சரமழை போல்’’* –திருப்பாவை–4.

இப்பாடலில் மழை பெய்கின்ற முறையினை சொல்லப்பட்டுள்ளது. மழை பெய்யும் முன்பு அறிகுறிகளாக மின்னல் ஏற்படும். பெரும் சப்தத் துடன் மழை பொழியும். நீ முதலாவதாகக் கடலுக்குச் சென்று, அக்கடலுள் புகுந்து, அந்த வெள்ளத்தை அப்படியே முகந்து கொண்டு வரவேண்டும் என்கிறார்கள். உப்புத் தண்ணீரைக் குடிக்கும், நன்னீராக்கி வழங்கும் என் னும் உட்கருத்து இங்கு குறிப்பாகச் சுட்டப்படுகிறது. மழை பெய்யும் போது அடக்கத்தோடு இல்லாமல் பெருமுழக்கத்துடன் பெருமிதமாக வான வீதியில் சென்று இவ்வுலகம் முழுமைக்கும் நீரை அளித்து வளம் சேர்க்க வேண்டும் என்ற பொது நோக்கு இங்கு போற்றத்தக்கது.

**குத்துவிளக்கு :**

ஒரு மனைக்கு அழகு சேர்ப்பவள் பெண். அதனால்தான் நமது முன்னோர்கள் குத்து விளக்குப் போன்றவள் பெண் என்று கூறிச் சென்ற னர். *‘‘குத்து விளக்கெரியக் கோட்டுக்கால்’’* (திருப்பாவை–19) என்று பாசுரமிடுகிறார். அன்றைய கால கட்டத்திலும் சரி, இன்றைய நவின காலமாக இருந்தாலும் சரி ஒரு பெண் வீட்டிற்கு வரும்போது குத்து விளக்குடன் வருகிறாள். தமிழர் வீடுகளில் குத்து விளக்கு ஒரு மங்கலப் பொருளாகும். குத்து விளக்கு ஏற்றாமல் எந்த ஒரு மங்கல நிகழ்ச்சியும் தமிழர் வீடுகளில் இன்றளவும் நிகழ்வதில்லை. எனவே குத்து விளக்கிற்கு தருகின்ற அந்த மதிப்பை நாம் பெண்களுக்குத் தருவது அவசியமாகும்.

**கூட்டுக்குடும்பம் :**

*‘‘கூடி வாழ்ந்தால் கோடி நன்மை’’* என்பது சான்றோர் வாக்கு. தனித்தனி குடும்பமாக இல்லாமல் எல்லோரும் ஒரே குடும்பமாக வாழ்வது மிகவும்

சிறப்பு வாய்ந்தது. எனவே தான் திருமூலர் *''ஒன்றே குலம் ஒருவனே தேவன்''* எனக் கூறினார்.

*''கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்''*

– திருப்பாவை–27

இத்தொடரில் "தாம் பெற்ற பேறு பிறரும் பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கமும், எல்லாருமே இன்புற்றிருக்க நினைக்கின்ற மனமும் எக்காலத்திற்கும் தேவை" என்பதை இது புலப்படுத்துகிறது.

**இறை பக்தி :**

நாம் வாழ்க்கையில் எல்லா நலமும் பெற இறையுணர்வு தேவை. அப்படிப்பட்ட இறைபக்தி ஆண்களை விட பெண்களுக்கு அதிகமாக உள்ளது. ஒரு பெண் தனக்கு மட்டும் வேண்டாமல் தனது குடும்பத்தில் உள்ள அனைவருக்காகவும் வேண்டிக் கொள்கிறார்.

*''யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு*
*உயர்ந்த உலகம் புகும்''* – குறள் – 346

எனவே இறைவனை வழிபட்டால் "நான்" என்பது மறைந்து, "நாம்" என வந்து விடும். இறைவனை வழிபட்டால் நம்முடைய ஏழு பிறவிகளிலும் அதன் பயன் வந்து சேரும்.

*''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு''*

– திருப்பாவை–29

*''சீரிய சிங்காசனத்திருந்து யாம் வந்த*
*காரியம் ஆராய்ந்தருளேலோ ரெம்பாவாய்''*

– திருப்பாவை–23

"வேலைப்பாடு மிக்க சிங்காசனத்தில் வீற்றிருக்கும் இறைவா எங்கள் குறைகளை கேட்க வருக" என்று அழைக்கிறார்கள்.

**முடிவுரை :**

பெண்கள் நமது கண்கள்! நாம் நமது கண்ணை எவ்வாறு பாதுகாக்கிறோமோ! அதைப்போல பெண்களை காப்பது அவசியமாகும். இதையே கவிமணி தேசிக விநாயம் பிள்ளை,

*''மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல*
*மாதவம் செய்திட வேண்டுமம்மா!*
*பங்கயக் கைநலம் பார்த்தலவோ - இந்தப்*
*பாரில் அறங்கள் வளரும் அம்மா''*

இவ்வுலகம் நல்ல முறையில் இயங்க, அறங்கள் வளர, சமுதாயம் அமைதியான வாழ்வைப் பெற பெண்களை மதிப்போம்! பெண்மையைப் போற்றுவோம்! நாட்டை உயர்த்துவோம்!







# திருவண்ணாமலை

திரு. பனையபுரம் அதியமான்,
திருவான்மியூர், 94448 00935

மலையே இறைவனாகத் திகழும் தலம்–பஞ்சபூதத் திருத்தலங்களுள் ஒன்று – நினைத்தாலே முக்தி தரும் தலம் – நடுநாட்டுத் தலங்களில் முதன்மையானது – அர்த்தநாரீஸ்வரர் கோலம் பூண்ட பூமி – கார்த்திகை தீபத்தின் மூலாதாரக் கோயில் – பல்லவன், சோழன், விஜயநகர மன்னன், நகரத்தார் எனப் பலராலும் திருப்பணி செய்யப்பட்ட ஆலயம் – தமிழகத்தின் இரண்டாவது உயரமான இராஜகோபுரம் கொண்ட கோயில் – ஹொய்சால மன்னனின் தலைநகராகத் திகழ்ந்த நகரம் – நால்வரால் பாடப் பெற்ற தலம் – அருணகிரிநாதரை ஆட்கொண்ட கோயில் – எண்ணற்ற மகான்களைக் கவர்ந்த ஆலயம் –நூற்றுக்கணக்கில் கல்வெட்டுகள் நிறைந்த திருக்கோயில் – மடங்கள், அன்னதானக் கூடங்கள் நிறைந்த ஊர் – தீமிதி விழா நடைபெறும் அபூர்வ சிவாலயம் என பட்டியலிடவே முடியாத அளவிற்கு தனிச் சிறப்புகள் கொண்ட திருத்தலமாகத் திகழ்வது, திருவண்ணாமலை.

### பெயர்க் காரணம் :

இறைவன் மலை வடிவில் தோன்றியதே அண்ணாமலை ஆகும். இதுபோல, அண்ணாமலையார், அருணாச்சலேஸ்வரர் என அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் இறைவன், ஒளி உருவில் மலையாக உருவம் கொண்டதை நம்பிய மக்கள், இங்குள்ள மலையை அண்ணல்மலை என அழைத்தனர்.. நாளடைவில் அது மருவி அண்ணாமலையானது, இதனுடன் திரு இணைந்து திருவண்ணாமலை ஆனது.

### கல்வெட்டுகள் :

கி.பி. 1902ல் இந்தியத் தொல்லியல் ஆய்வறிக்கையில் நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழ், சமஸ்கிருதம், கன்னடம் ஆகிய மொழிகளில் இக்கல்வெட்டுகள் அமைந்துள்ளன. இக்கல்வெட்டுகளில் பழைமையானது முதலாம் பராந்தகனின் (கி.பி.922) கல்வெட்டு ஆகும்.




அன்னை உமா தேவி திருவண்ணாமலையில் தவமியற்றிய மலையே பவழக்குன்று என அழைக்கப்படுகின்றது. இம்மலை கிரிவலம் முடிக்கும் இடத்திற்கு முன்பாக, துர்க்கை அம்மன் சன்னதியை ஒட்டிச் செல்லும் பாதையில் அமைந்துள்ளது. இம்மலையிலும் ரமணர் சிறிது காலம் தவமியற்றியுள்ளார். இம்மலை அடிவாரத்தில் கண்டாச்சிபுரம் அழகானந்தா சுவாமிகள் பவழக்குன்று மடம் அமைத்து பராமரித்து வந்தார்.




இத்தலத்து இறைவன் வல்லாள மகாராஜனின் வேண்டுகோள்படி அவருக்கு மகனாகப் பிறந்து அருள் வழங்கியதால் குழந்தைப்பேறு தரும் தெய்வமாகப் போற்றப்படுகிறார். இதனால் குழந்தை வரம் பெற்றவர்கள் குழந்தையை கரும்பு தொட்டியில் கட்டி ஆலயத்தைச் சுற்றி வருவது வழக்கம். இது அரிதான வேண்டுதல் என்பது குறிப்பிடத்தக்கது.




திருவண்ணாமலையார் ஆலயத்தில் அம்மன் சன்னதி முன்பாக ஆண்டு தோறும் ஆடிப்பூரம் அன்று தீமிதி விழா நடைபெறுவது அபூர்வ நிகழ்வாகும். சிவாலயம் எதிலும் இத்தகு விழாக்கள் நடத்தப்படுவது இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**இறைவன்-இறைவி :**

திருவண்ணாமலை ஆண்டார், திருவண்ணாமலை மகாதேவர், திருவண்ணாமலை ஆழ்வார், அண்ணா நாட்டு உடையார் என, இறைவனுக்குப் பல்வேறு திருப் பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. என்றா லும், இன்றைய பெயர் அண்ணாமலையார், அருணாச் சலேஸ்வரர் என்பது, அபிதகுஜா நாயகி, உண்ணா முலை நாச்சியார், திருக்காமக் கோட்ட நம்பிராட்டியார் எனக் குறிப்பிடப் பட்டாலும், இன்றைய பெயர், அபீதகு ஜாம்பிகை, உண்ணாமுலையம்மை என்பதே.

**அர்த்தநாரீஸ்வரர் :**

கார்த்திகை மாதம் பௌர்ணமியுடன் கூடிய கிருத்திகை பிரதோஷ காலத்தில் மலைமேல் ஜோதி சொரூப தரிசனம் கண்டு, சிவனிடம் இருந்து இடது பாகத் தைப் பெற்று அமர்ந்தாள் அன்னை பார்வதி என்பது புரா ணம் கூறும் செய்தி ஆகும். ***"உண்ணாமுலை உமையா ளொடும் உடனாகிய ஒருவன்"***, என திருஞான சம்பந்தர் குறிப்பிடுகிறார்.

**இலக்கியங்கள் :**

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், நக்கீரர், கபிலர், பட்டினத்தார், வள்ள லார் முதலானோர் பாடி வழிபட்ட தலம். ஆதிசங்கரர் இயற்றிய அருணாச்சல அஷ்டகமும் குறிப்பிடத்தக்கது. மாணிக்கவாசகர் இத்தலத்தில் பல காலம் தங்கியிருந்து திருவெம்பாவை, திருவம்மானை ஆகிய இரண்டு பதி கங்களைப் பாடியுள்ளார். அருணகிரிநாதர் திருப்புகழ், கந்தரனுபூதி இயற்றிய தலம். இது தவிர, ரிஷிகள், தேவர் கள் மற்றும் மகான்கள் வழிபட்ட கோயில்.

**ஆலய அமைப்பு :**

24 ஏக்கர் பரப்பளவில் 6 பிராகாரங்கள், 9 இராஜ கோபுரங்கள், 140க்கும் மேற்பட்ட சந்நிதிகள் என மலை யடிவாரத்தின் கீழ்த்திசையில் கிழக்கு நோக்கி அமைந் துள்ளது. இராஜகோபுரம் 11 நிலைகளைக் கொண்டு, 217 அடி உயரத்தில் கம்பீரமாக விண்ணை முட்டி நிற்கின் றது. இது தென்னிந்தியாவின் இரண்டாவது உயரமான கோபுரமாகும்.

**விழாக்கள் :**

ஆறுகால பூஜை, பஞ்ச பருவ உற்சவங்கள் நடை பெறுகின்றன. கார்த்திகையில் துர்க்கை, பிடாரி மற்றும் விநாயகர் உற்சவங்களில் தொடங்கி சண்டேசு வரர் விழா முடிய, மொத்தம் பதினேழு நாட்கள் மகா பிரம்மோத் ஸவ விழா என விழாக்களுக்குப் பஞ்சமில்லை.

**மலையின் மகிமை :**

பொதுவாக மலைமீது தான் இறைவன் குடியிருப் பது வழக்கம். ஆனால் மலையே இறைவனாக இருப்பது திருவண்ணாமலையில் மட்டுமே காணப்படும் சிறப்பு. மலையின் உயரம் 2688 அடி. மலையின் சுற்றுப் பாதை 14 கி.மீ. ஆகும். இம்மலை கிருதாயுகத்தில் அக்னி மலை யாகவும், திரேதா யுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபரயுகத்தில் பொன் மலையாகவும், கலியுகத்தில் கல் மலையாகவும் விளங்குகிறது எனப் புராணம் கூறுகி றது. இம்மலை நெருப்பினால் உருவான மலை என விஞ் ஞானிகள் கூறுகின்றனர். சிவலிங்கங்கள் மலையைச் சுற்றி எண் திசைகளிலும் அமைந்துள்ளன.

**அமைவிடம் :**

நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்தும், திருவண்ணாமலைக்கு போக்குவரத்து வசதி உள்ளது. சென்னையில் இருந்து தென்மேற்கே 190 கி.மீ., விழுப்புரத்தில் இருந்து வடமேற்கே 60 கி.மீ., வேலூரில் இருந்து 80 கி.மீ., காஞ்சிபுரத்திலிருந்து 115கி.மீ., பெங்களூரில் இருந்து 220 கி.மீ., திருப்பதியில் இருந்து 190 கி.மீ. தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது.



**தீர்த்தங்கள் :**

தீர்த்தங்கள் நிறைந்த தலமாக திருவண்ணாமலை திகழ்கின்றது. இவற்றில் ஆலயத்துக்குள் இருக்கும் சிவகங்கை தீர்த்தமும், பிரம்ம தீர்த்தமும் முதன்மையானவை ஆகும்.

**திதி தரும் இறைவன் :**

குழந்தைப்பேறு இல்லாத வல்லாள மகாராஜனுக்கு இறைவனே மகனாகப் பிறந்ததால், ராஜாவின் மறைவிற்குப் பிறகு, அவருடைய நினைவு நாளில் தந்தைக்கு மகன் செய்யும் திதியை, அண்ணாமலையாரே ராஜா வாழ்ந்த பள்ளிகொண்டாப்பட்டுக்கு ஆண்டுதோறும் மாசி மகத்தன்று நேரில் சென்று, திதி தந்து வருவது குறிப்பிடத்தக்கது. அடியாருக்கு மகனாகவும் பிறந்து, தன் கடமையை செய்யும் அப்பெருமானை எப்படி புகழ்வது.

**தரிசன நேரம் :**

காலை 5.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரையிலும், மாலை 3.30 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலும் ஆலயம் திறந்திருக்கும். விழாக்காலங்களில் கூடுதல் நேரம் திறந்திருக்கும்.







**தீபத்திருவிழா**

**கார்த்திகை மாத பிரம்மோத்ஸவத்திருவிழாவில் பத்தாம் நாள் அதிகாலை நான்கு மணிக்கு ஆலய உட்புறத்தில் பரணி தீபம் ஏற்றப்படுகிறது. இதனைத் தொடர்ந்து மாலையில் மகாதீபம் ஏற்றப்படும். மாலை 5.30 மணியளவில் பஞ்சமூர்த்திகளும் சிவாலய முன்புற மண்டபத்தில் காட்சித் தருவார்கள். சரியாக 6 மணிக்கு அர்த்தநாரீஸ்வரர் ஆனந்தத் துள்ளாட்டத்துடன் பஞ்சமூர்த்திகள் முன்பு காட்சித் தருவார். அப்போது மகா தீபாராதனை நடைபெறும். வானத்தை நோக்கி வெடி பாணங்கள் விடப்படும் போது, மலையுச்சியில் மகாதீபம் ஏற்றப்படும்.**




**மலை தீபம்**

**மகாதீபம் ஏற்றுவதற்காக மலையின் உச்சியில் சுமார் 92 கிலோ செம்பும், 110 கிலோ இரும்புச் சட்டங்களையும் கொண்டு உருவாக்கப்பட்ட, ஐந்தரை அடி உயர கொப்பரை வைக்கப்படும். தீபம் ஏற்றும் உரிமை பருவதராஜ குலத்திற்கு மட்டுமே உரித்தானது.**



# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

## ரிஷபதேவர் அவதாரம்




தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி-9676695443

ரிஷபதேவரின் அவதாரத்தைப் பற்றி ஸ்ரீமத்பாகவதத்தில், ஐந்தாவது ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது. இந்த அவதாரம், பகவானின் எட்டாவது அவதாரமாக வருணிக்கப்பட்டுள்ளது. ***"அஸ்டமே மேரு தேவ்யாந்து நாபேர்ஜாத உருக்ரம:"*** என்று பாகவதத்தில் முதல் ஸ்கந்தத்தில் வருணிக் கப்படுகிறது. மஹாராஜா நாபிக்கும், அவனுடைய மனைவி மேருதேவிக்கும் பகவான் ரிஷப தேவராக அவதரித்தார். அற்புதமான இந்த ரிஷப தேவர் அவதாரத்தில் பகவான் மிகவும் உயர்ந்த உபதேசங்களை உபதேசித் துள்ளார். பிரிய விரதனின் வம்சத்தில் தோன்றிய ரிஷபதேவருக்கு முன்பிருந்த வம்சத்தினரின் விவரங்கள் இப்படியாக அமைந்துள்ளது.

நாரத முனிவராலேயே மிகவும் புகழ்ந்து பேசப்பட்ட பிரிய விரதன் ஆன்மீகப் பாதையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வ தற்குத் தபோவனத்தை நாடிச் சென்ற பிறகு, அவனுடைய மகனான ஆக்னீதரன் ஜம்பு தீவிற்கு அரசனானான். தர்ம நெறியில் நின்று ஆட்சி நடத்தினான். அவன் நாட்டு மக்களைத் தன்னுடைய பிள்ளைகளைப் போல் கருதிக் காத்து வந்தான். நாட்டு மக்கள் அனைவரையும் தர்ம நெறியில் நடக்கும் விதமாக வழி நடத்தினான். அவனுடைய பிள்ளைகள் ஒன்பது பேரும் நல்ல உடல் வலிமையுடையவர்களாகவும், மேன்மையான சிறப்புகள் உடையவர்களாகவும் திகழ்ந்தனர். ஆக்னீதரன் தன்னுடைய பெரிய நாட்டை ஒன்பது பிரிவுகளாகப் பிரித்து, அதனைத் தன் பிள்ளைகள் ஒன்பது பேரும் ஆளும்படியாகக் கொடுத்தான். அவ்வாறாக அவர்கள் தந்தை வழியாக வந்த ராஜ்ஜியங்களை நல்ல முறையில் ஆண்டு வந்தனர்.

ஆக்னீதரன் மேலான உலகை அடைந்த பின்பு, அவனுடைய பிள்ளைகளான ஒன்பது பேரும் மேருவின் பெண்களான மேருதேவி, பிரதிரூபா, உக்ரதம்ஷ்டை, லதா, ரம்ய, சியாம, நாரி, பத்ர, தேவ வீதி எனும் ஒன்பது பெண்களையும் திருமணம் செய்து கொண்டனர். ஆக்னீதரனின் மூத்த மகனான நாபி, பிள்ளைப்பேறு வேண்டி விஷ்ணு பகவானை மிகவும் பக்தி சிரத்தையோடு வணங்கினான். அவனுடைய மனைவி மேருதேவியும் தன் கணவனோடு தேவ தேவனை அர்ச்சித்து வணங்கினாள். பகவானின் பக்தனான நாபி கள்ளக்கபடமற்ற நிர்மலமான உள்ளத்தோடு செய்த அந்த வேள்வியினால் மிகவும் மனம் மகிழ்ந்த பகவான் நான்கு திருக்கரங்களோடு அவனுக்குக் காட்சியளித்தார்.

அவருடைய உடல் சொர்ண மயமாக ஒளி வீசியது. அவர், பிரகாசிக்கின்ற பட்டுப் பீதாம்பரமும், சங்கு சக்கரம், பத்மம், வன மாலை, கௌஸ்த்துவமணி, கதை முதலான பகவத் சின்னங்கள் விளங்கவும், மார்பில் ஸ்ரீவத்ச சின்னம் பிரகாசிக்கவும் தோன்றினார். அவருடைய திவ்ய வடிவத்தைக் கண்ட ரித்விக்குகள் நீண்ட காலம் வறுமையில் உழன்றவன் மிகுந்த செல்வத்தை அடைந்ததைப் போன்ற

பெருமகிழ்ச்சியுற்று இறைவனின் குணங்களைச் சொல்லித் துதித்து ஸ்தோத்திரம் செய்தார்கள்.

அப்பொழுது ரித்விக்குகள், இறைவனைப் பார்த்துக் கூறத் தொடங்கினர். "இறைவனே! எல்லோராலும் போற்றப்படுபவனே! நாங்கள் உன் சேவகர்கள். நீயே முழுமுதற் பொருளானவன். இருந்த பொழுதும், அடியவர்களாகிய நாங்கள் செய்யும் சிறு சேவையை ஏற்றுக்கொள்வாய் என நம்புகின்றோம்.

தேவாதி தேவனே! வரம் கொடுப்பதில் நீயே மிகவும் சிறந்தவர். எங்களுடைய தவத்தினால் தங்களை பிரசன்னராக்கியிருக்கிறோம் என்று சொல்வதைவிட தங்களுடைய கருணையினால் இங்கு எழுந்தருளியிருக்கிறீர்கள் என்று சொல்லுவதே மிகவும் பொருந்தும். உங்களுடைய தரிசனம் எங்களுக்குச் சிறந்த வரமாகும். உலக நன்மையைக் கருதி, இந்த நாட்டை ஆளுவதற்கு உம்மை போன்று பிள்ளை வேண்டுமென்ற விருப்பத்தில் வேள்வி செய்து, தவம் காக்கும் அரசன் நாபியின் வேண்டுதலை நிறைவேற்ற வேண்டும்" என்று பிரார்த்தித்தனர்.

அப்பொழுது, நாபி தம்பதியரும் மற்றும் அங்கு கூடி இருந்த அனைவரும் விஷ்ணுவை பணிவோடு வணங்கி நின்றனர். அவர்கள் மீது கருணைக் கொண்ட இறைவன், "ரிஷிகளே! உங்கள் போற்றுதலில் மிகவும் மனம் மகிழ்ந்தேன். நீங்கள் சத்திய வாக்குப் பெற்றவர்கள். உங்களுடைய வாக்குப் பொய்யாகப் போகக் கூடாது. நீங்கள் எல்லோரும் நாபி இராஜனுக்கு எனக்கு நிகரான பிள்ளை வேண்டுமென்று கேட்டீர்கள். ஆயினும் எனக்குச் சமமாக வேறு எவரும் இல்லாத காரணத்தினாலே நானே இந்த அரசப் பத்தினியான மேரு தேவியின் கர்ப்பத்தில் அவதரிப்பேன்" என்று கூறி மறைந்தார்.

அந்த வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த நாபி தம்பதியர்கள், ரிஷிகள் மற்றும் கூடியிருந்த அனைவரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர். தர்ம நெறி இது எனத் தானே எடுத்துக் காட்டுவதற்கும், நாபி ராஜனின் வேண்டுதலை நிறைவேற்றுவதற்கும், சுத்த சத்துவ வடிவத்தில் மேரு தேவிக்குப் பிள்ளையாகப் பகவான் அவதரித்தார். அக்குழந்தைப் பிறக்கும்போதே தெய்வச் சின்னங்களான அங்குசம், வஜ்ஜிரம் முதலான அடையாளச் சின்னங்களுடன் பிறந்தது. மேலும், அக்குழந்தை மிகவும் பரமசாந்த குணமுடையதாகவும், போகத்தின் மீது நாட்டமில்லாத திவ்விய இலட்சணம் பொருந்திய தாகவும் அமைந்திருந்தது. நாபிக்கு குழந்தையாகப் பிறந்த இறைவன் நாளொரு பொழுதும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தார். நல்ல உடல் பலத்தோடு வீரம், அழகு, கருணை, உற்சாகம் அனைத்தும் உடையவராக விளங்கினார். கவிகள் வருணிக்கும் அழகு அடையாளங்களின் மொத்த உருவமாக அமைந்த அக்குழந்தைக்கு ரிஷப தேவன் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர். "ரிஷபதேவன்" என்றால் சர்வ சிரேஷ்டன், மஹாபுருஷன் என்று பொருள்.

தன் பிள்ளையான ரிஷபதேவன் சர்வலோக சமர்த்தனாக இருப்பதை கண்டு நாபி ராஜன், வேத நெறிமுறைகளை கடைப்பிடித்து தர்ம மார்க்கத்தில் ஆட்சி செய்வதற்கு அவனை சக்கரவர்த்தியாக நியமித்தான். அரசாட்சியில் துணையாக நின்று அறவழிக்காட்டும் அந்தணரிடத்தில் தன் மகனை ஒப்படைத்து, பின்பு நாபி தன் மனைவியோடு இமய மலையில் உள்ள பத்ரிகாசிரமத்திற்குச் சென்றார். அங்கு மகாபுருஷனான ஸ்ரீகிருஷ்ணனை நினைத்தவர்களாகத் தவம் செய்து, நரநாராயணர்கள் சந்நிதியிலே எஞ்சிய காலத்தைக் கழித்து முக்தி அடைந்தார்கள்.

பாகவத கதை சாகரம் தொடரும்...



## ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம்

*வயஸி கதே க: காமவிகார:*
*சூஷ்கே நீரே க: காஸார:।*
*க்ஷீணே வித்தே க: பரிவார:*
*ஜ்ஞாதே தத்த்வே க: ஸம்ஸார: ।*

**வாலிபப்பருவத்தை கடந்து விட்டால், காமத்தால் ஏற்படும் தூண்டுதல் அறவே இருக்காது, தண்ணீர் வறண்டு இல்லாது போனால் நீர்நிலைகள் என்பதே இருக்க முடியாது அல்லவா...? அதுபோலவே செல்வம் குன்றி வறண்டு போனால் சுற்றத்தார் எவரும் அருகில் வந்து சீண்ட மாட்டார்கள். ... இவை போல, சத்தியமான பரம்பொருளை உணர்ந்து அறிந்து விட்டால், பிறப்பு இறப்புகள் கொண்ட "இந்த ஸம்ஸாரம்" என்பதே இல்லாமல் போய்விடும்.**

**கருத்து : ஆகவே, அழியக்கூடிய பொருள், உறவுகள், செல்வம் இவற்றின் பொருட்டு, நேரத்தை செலவிடாமல், பரம்பொருளை அறிந்து உணர்ந்து "பிறப்பு இறப்பு அற்ற முக்தியை" அடைவதே சாலச்சிறந்ததாகும்.**

**– திரு. சீதாராமன், சென்னை.**

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

**திருப்பாணாழ்வார் வாழித்திருநாமம் தொடர்ச்சி...**

(மலர்க்கண்ணில் வேறொன்றும் வையாதான்) கண் என்று ஞானமாய் பெரிய பெருமாளை ஞானக் கண்ணாலே கண்டு மலர்ந்ததாயிற்று பற்றி "மலர்க்கண்" என்றபடி. "மலர்க்கண்" – மலர்தலையுடைய கண். இல்– எல்லைப்பொருள். அதாவது மலர்தலையுடைய கண் கள் எல்லையாக அரங்கனைத் தவிர வேறொன்றில் வையாது என்று எல்லையைச் சொன்னபடி. அதாவது ஆழ்வாருக்குப் பெரிய பெருமாளை ஒழிய வேறொ ருவரை அநுபவிக்க விருப்பமே இல்லை. ஆழ்வாருக்கு உண்டானாலும் அரங்கனை அநுபவித்த தன்னுடைய கண்கள் மற்றொன்றை அநுபவிக்க மாட்டா என்று சுவை பட உரைப்பர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். மேலும், திருவடிகள் தம் கண்ணுக்கு இலக்காவதே என்று கண்களை மூடினார். ஆனால் அத்திருவடிகள் தொடர்ந்து வந்து மூடின கண்ணினுள்ளும் ஊடறுத்து உட்புகுந்து நிற்கையாலே வேறொன்றில் வையாதாயிற்று என்பர். இது பற்றியே *''என் அமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''* என்கிறார் ஆழ்வார். மற்றொன்றினைக் காணாவே என்பதற்குச் சேர பெரிய வாச்சான்பிள்ளை *''என் நினைவு ஸ்ரீவைகுண்ட நாதனிடத்தில் செல்லுகின்ற தில்லை''* என்று ராம பிரானிடம் அநுமன் சொன்னது போலே, கண்களுக்குக் கூலி கொடுத்தாலும் வேறொரு அர்ச்சாவதாரமோ விபவாவதாரத்தையோ விரும்பி இனியதாகக்கொள்ளா என்று உரைப்பர். திருவரங்கத்தில் திருப்பாணாழ்வார் ஸந்நிதியில் அனுமனும் எழுந்தருளியிருப்பது இதனை மெய்ப்பிப்பதாகக் கொள்ளத்தகும். வேதாந்தாசாரியரும் *''காண்பனவும் உரைப்பனவும் மற்றொன்றிக் கண்ணனையே கண்டு உரைத்த கடிய காதல் பாண் பெருமாள்''* என்று அநுபவித்து உரைப்பர்.

(அம்புவியில் மதிளரங்கர் அகம் புகுந்தான்) அம்புவி – அழகிய பூமி. பூமிக்கு அழகாவது அரங்கன் வந்து பள்ளி கொண்டதனால். மதில் அரங்கர் – மக்களைக் காப்பதற்குத் தக்கபடியான மதிளையுடைய கோயிலில் பள்ளிகொண்ட அரங்கர். அகம் – கர்ப்ப க்ரஹம். லோகசாரங்க மஹாமுனிகள் ஆழ்வாரைத் தன் தோளிலே ஏறியருளப் பண்ணிக்கொண்டு, அழகிய மணவாளன் திருமுன்பே கொண்டு வந்து சேர்ப்பிக்க, இவரும் நம்பெருமாளைப் பாதாதிகேசாந்தமாக அனுபவித்து, அவ்வநுபவபரிவாஹரூபமான *''அமல னாதி பிரான்''* என்னும் ப்ரபந்தத்தை பின்புள்ளாரும் அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும்படி உபகரித்தருளி,



**74. சாஸ்த்திர நீதிகள் :**

தாரித்ரிய க்ருதம் தாநம்
சூன்ய லிங்கம் ச பூஜனம் |
அநாத ப்ரேத சம்ஸ்க்காரம்
அஸ்வமேத சமம் விது: ||

குழந்தைகள் பல இருந்து மிகவும் கஷ்டப்படும் வேத பண்டிதர்களுக்கும், உண்மையான தரித்ரனுக்கும் கொடுக்கும் தானமே சிறந்தது. முடிக் கிடக்கும் பூஜையே இல்லாத கோயிலை சுத்தம் செய்து விளக்கு ஏற்றி வைத்து, பூஜை செய்ய உதவுவதும், அனாதையைக இறந்து போன மனுஷ்யர்களை தகனம் செய்ய எல்லா உதவிகளும் செய்வதும், இந்த மூன்று செயல்களைச் செய்தால் அசுவமேதயாகம் செய்த பலன்களை பெற்று விடலாம்!

**தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸெளந்திரராஜபட்டர், புதுடில்லி.**

அனைவரும் காண நம்பெருமாள் திருவடிகளில் அந்தர்பவித்தருளினார். இதுபற்றியே *"அகம் புகுந்தான்"* என்றபடி.

(அமலனாதிபிரான் பத்தும் அருளினான்)

*"அமலனாதிபிரான்"* என்னும் பிரபந்தம், ஓங்காரம் போலே மிகச் சுருக்கமாய், வேதம்போலே பரந்ததாய் இராமல் பத்தே பாட்டாய் எளிதில் அறியலாம்படி அனைவராலும் கற்கத்தக்கதாய் இறைவன் இயல்பு, ஜீவாத்ம இயல்பு, ஜீவாத்மா அவனைப் பெறும் வழியின் இயல்பு, அவ்வழியைத் தடுக்கும் விரோதியின் இயல்பு, விரோதி போய் பெரும் பேற்றின் இயல்பு ஆகிய ஐம்பொருளான அர்த்த பஞ்சகத்தைத் தெரிவிப்பதாகும். லோகசாரங்கமுனிவர் தோள் மேலே பாணரை ஏற்றிக் கொண்டு போக, வழியிலே ஒன்பது பாட்டுப்பாடித் திருப்பிரம்புக்குள்ளே நின்று பத்தாம் பாட்டைப்பாடி அருளினார் என்பர் நாயனார். அமுதனார், *"சீரிய நான்மறைச் செம்பொருள் செந்தமிழால் அளித்த பார் இயலும் புகழ்ப்பாண் பெருமாள்"* என்பர். இதற்கு எம்பெருமானுடைய இயல்பு, வடிவு, குணம், செல்வங்களைத் தெரிவிக்கையால் வந்த சீர்மையையுடையதாய், ருக் முதலான நாலுவகைப்பட்ட வேதத்தினுடைய இனிமையோடு கூடியதான பொருளை நடைவிளங்கு தமிழாலே உதவினவர் என்பர் மாமுனிகள். இந்தத் திவ்யப்ரபந்தத்தின் முதல் மூன்று பாட்டுக்களின் தொடக்க எழுத்துக்கள் *"மூலமாகிய ஒற்றையெழுத்து"* என்று பெரியாழ்வார் அருளியபடியே ஓங்காரத்தின் முதல் நடு இறுதி எழுத்துக்களான அ,உ,ம என்னும் எழுத்துக் களாகவே அமைந்துள்ளன என்பர் வேதாந்தாசாரியர். மேலும் இவ்வாசாரியர் *"பாடல் பத்தும் பழமறையின் பொருள் என்று பரவுகின்றோம்"* என்பர். இந்தத் திவ்வியப் பிரபந்தத்தில் திருவரங்கனும் திருவேங்கடமுடையானும் மங்களாசாசனம் செய்யப் பெற்றுள்ளனர். திருவேங்கட முடையான் இரண்டு பாடல்களால் சுருக்கமாகத் துதிக்கப்பட்டான். திருவரங்கனோ ஒவ்வொரு பாட்டிலும் விரிவாகத் துதிக்கப்பட்டான்.

(செம்பொன் அடி முடியளவும் சேவிப்போன்)

செம்பொன் அடி – சிறந்த பொன்போன்ற திருவடி. சிவந்த விரும்பத்தக்க திருவடி. சேவித்தல் – அநுபவித்தல். அதாவது *"அரங்கத்தம்மான் திருக்கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளன ஒக்கின்றவே"* என்று ஸ்ரீரங்கராஜனுடைய சரணாம்புஜங்கள் தம் கண்ணில் புகுந்தன போல் இருக்கிறது என்கிறார். *"அரங்கத்தம்மான் அரைச்சிவந்த ஆடை"* என்று திருவரங்கச் செல்வத்தை நடத்தி வைக்கிறவனுடைய பீதாம்பரத்தின் மேல் தம் நினைவு பதிந்ததாக அநுபவித்தார். பின்னர், *"அரங்கத் தரவினணையான் அயனைப் படைத்ததோர் எழில் உந்தி"* என்று பிரமன், சிவன் ஆகியோரைப் படைப்பதற்குக் காரணமான உந்திகமலத்தின் மேல் தம் மனம் படிந்தது என்று அநுபவித்தார். *"அரங்கத்தம்மான் திருவயிற்று உதரபந்தம்"* என்று எவராலும் தம் முயற்சியாலே தேடமுடியாத அரங்கனின் உதரபந்தம் என்னும் திருவாபரணமானது தம் உள்ளத்துள் நிலைத்து நின்று உலாவுகின்றது என்று உரைப்பர். *"அரங்கத்தம்மான்*


**ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்**

ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு அளிக்கும் சம்பாவணையை தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்த தி.தி.தே. முடிவு எடுத்துள்ளது.ஸப்தகிரி எழுத்தாளர்கள் தங்களுடைய கட்டுரையுடன் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் வங்கியின் விவரங்களை (Your Bank A/c No., Bank Name with IFSC Code No.) இணைத்து அனுப்புதல் வேண்டும். தவறினால் உங்கள் கட்டுரை அச்சிட இயலாது.

– பிராதன ஆசிரியர்

திருவாரமார்பு'' என்று லக்ஷ்மீதேவி விளையாடுமிடமாகக் குறிக்கும் திரு மார்பானது அடியவனான தம்மை அடிமைப்படுத்திக் கொண்டது என்று அநுபவித்தார். அடுத்ததாக ''அரங்கநகர் மேயவப்பன் முற்றும் உண்ட கண்டம்'' என்று அரங்கனின் கழுத்து தம்மை உஜ்ஜீவிப்பது என்பர். ''அணியரங்கனார் செவ்வாய்'' என்கிறபடியே திருப் பவளமாகிற போக்யமான செங்கனி வாயானது என் நெஞ்சை கொள்ளை கொண்ட தன்றோ என்று வியந்து அநுபவிக்கிறார். திருப்பவளத்தை அநுபவிக்கும்போது கையில் திருவாழி திருச்சங்கு கண்டது பற்றி ''கையினார் சுரி சங்கன லாழியர்'' என்று சுவைபட அருளுவர். இவ்விடத்தில் நம்பிள்ளை ஈட்டில் ''நம்மைப் போலன்றியே பெரிய பெருமாளைத் தெரியக் கண்டவர்'' என்று உரைப்பர். கண்களை அநுபவிக்கும் போது ''அரங்கத் தமலன் முகத்துக் கரியவாகிப்புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரியவாய கண்கள்'' என்று சிறிதுபோதும் வாட்ட மில்லாதாய், வெம்மையையுடைய தாமரைப் பூவைக்காட்டிலும் வேறுபட்ட தாய், எப்போதும் ஒருபடிப்பட்டிருப்ப தாய், பரப்பையுடையதாய், பெரியதாய், நீண்டதாய், அழகியதாய், குளிர்ந்த தாய், திருமகள் சேர்த்தியாலும், வாத் ஸல்யத்தாலும் சிவந்த திருக்கண்கள் தம்மை உந்மத்தனாகச் செய்து விட்ட தாக அநுபவிக்கிறார். அரங்கனது ஸமு தாய சோபையான திருமேனியானது ''நீலமேனி ஐயோ நிறை கொண்டது'' என் கிறபடியே தம்முடைய நெஞ்சின் அடக் கத்தைக் கொள்ளை கொண்டு போயிற்று ஐயோ இதற்கு என் செய் வேன்? என்று உருகுகிறார். இது பற் றியே ''என் அமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே'' என்று முடிக்கிறார். திருமலை நம்பி என்னும் ஆசார்யரும், இப்பிரபந்தத்துக்கு அருளிய தனியனில் ''காட்டவே கண்ட பாதகமல நல்லாடை உந்தி தேட்டரு முதரபந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய் வாட்டமில் கண்கள் மேனி'' என்று அரங்கனின் திருமேனியை ஆழ்வார் அநுபவித்துப் பாடியதைத் தொகுத்து உரைப்பர்.

(திருப்பாணன் பொற்பதங்கள் செகதலத்தில் வாழியே) திரு – செல்வம். வீணையும் கையுமாய்ப் பெரிய பெருமாள் திருவடிக்கீழே நிரந்தர சேவை பண்ணிக்கொண்டிருக்கும் செல்வத்தையுடையவரான பாணரு டைய விரும்பத்தக்க திருவடிகளை இவ்வுலகில் வாழ்த்தி துதிப்போமாக. பாண் – இசைப்பாட்டு. தமிழ்ப்பாணன் – செந்தமிழ் பாடலில் வல்லவர் திருப்பாணாழ்வார். இதுபற்றியேனும் ''இசைகாரர்'' என்று நம்மாழ்வாரால் கொண்டாடப் பட்ட மஹாவைபவத்தையுடையவர் என்று உரைப்பர் சீயர். மேலும் பெரிய பெருமாளுக்கு உகப்பாம்படி இனிதாகப் பாடுவாரா கையாலே அந்த இசையைத் தனக்கு அடையாளமாக உடையவர். இதுபற்றியே "கா(ஙா)யிக ஸார்வபௌமர்" என்று இவரை போற்றுவர். அப்படிப்பட்டவருடைய திருவடிகளை ''சரணாம்பதுமம்'' என்பர் அமுதனார். அதாவது அழகான திருவடிகளாகிற தாமரைப்பூ. இத்தகைய பாதத்தை தன் சென்னிக்கு அலங்காரமாகக் கொண்டவர் இராமாநுசர் என்பர். எனவே நாமும் திருப்பாணாழ்வார் திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடி வாழ்த்துவோமாக.

வாழித்திருநாமம் வளரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் – 40க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | க் | க | ண் | ண | பு | ர | ம் | | | தி |
| லை | ல் | ரி | பு | ண | யா | ல் | க | ய | த் | 2 நி | த் |
| தி | யி | 3 ம | | | ணு | ஷ் | வி | கா | 4 ம | 9 கொ | யோ |
| 5 மி | கோ | கு | ர் | ச | ர | கீ | ங் | 7 ஆ | ண | ண் | 8 அ |
| ன் | ணி | ட | வ | ர் | 20 ந | 6 ந | | | க் | ட | |
| வா | பா | ல | னி | வா | ற் | ஞ் | | சி | 18 கா | ல் | டி |
| ழ் | க | ட் | மு | ழ் | க | ச | ர் | லூ | ல் | 19 கொ | கு |
| யா | ங் | சு | க | பா | தி | ன் | | | ந | | க் |
| ழி | ர | மி | ர் | ரு | யை | க | ன் | ச | ம் | 10 க | தி |
| வா | 11 சா | | 12 க | 13 க | 21 க | ட் | | | பி | | வே |
| ரு | வை | சே | ர் | சா | ச் | யா | டை | ட் | 14 தொ | | ரு |
| 15 தி | | | 16 ச | ட | கோ | ப | ர் | அ | ந் | தா | 17 தி |

பருவ தினம்

# மார்கழியும் பாவையும்



– திருமதி எஸ். பவானி, மன்னார்குடி
97881 87034

**மார்கழி :**

சித்திரை தொடங்கி பங்குனி மாதம் வரை அமைந்த பன்னிரண்டு மாதங்களில் ஒன்பதாவது மாதம் மார்கழி. சூரியன் இந்தக் காலத்தில் தனுர் ராசியில் சஞ்சரிப்பதால் இதனை தனுர் மாதம் என்கிறோம். மேலும் இம்மாதத்தை மார்க்கசிரிஷம், தனுர் மாதம், ஆக்ரஹாயனம் என்னும் பெயர்களால் அழைப்பார்கள். திருமாலின் திருநாமங்கள் 12ல் "கேசவன்" எனும் அறிவு தரும் திருப்பெயரே இந்த மாதத்தின் அதிஷ்டான தேவதை. இக்கேசவன் என்ற முதல் திருப்பெயரே இந்த மாதத்தில் துவங்குவதால் இம்மாதமே முன் வருஷத்தின் முதல் மாதம் எனவும் கூறுவதுண்டு.

சூரியனிடமிருந்து மனித உடலுக்கு ஜீவாதாரமான "மாத்யம்" என்ற ஆற்றலையும், உயிருக்கு அல்லது ஆன்மாவுக்கு ஜீவாதாரமான "அம்ருதம்" என்ற ஆற்றலையும் பெற முடிகிறது. மாத்யம் தக்ஷிணாயனத்திலும், அம்ருதம் உத்ராயணம் என்கிற வருச ஆரம்பமான மார்கழியிலும் கிடைக்கும். இந்த சக்தியை விஞ்ஞானிகள் "ஓசோன்" என்ற ஈதர் காற்று என்பார்கள். இது மார்கழியில் அதிகாலையில் வீசும். இது உடம்பில் பட வேண்டி, மார்கழி நீராடல், பாவை விழா என்பன இம்மாதத்தில் அமைத்திருக்கிறார்கள். இதனைத் தமிழ்ச் சங்க நூல்கள் "தை நீராடல்" என அழைக்கும். கருத்துக் களஞ்சியமான ஸ்காந்தம் மார்க்கசீரிஷ மகாத்மியத்தில், இந்த மாதத்தில் நீராட்டப்பூஜை, தியானம், மௌனம், ஜபம் முதலியன செய்தால் இறையருள் விரைவில் கிட்டும் என்று கூறி ஆயர்ப்பாடியில் முன்னர் கண்ணன் முன்னிலையில் ஆயர் சிறுமிகள் இந்த நோன்பை, இந்த மாதத்தில் செய்ததாகவும், கடைசியில் கண்ணபிரான் திருவருளைப் பெற்றதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த மாதத்தில் பூதானம், கோதானம், அன்னதானம் விசேஷம். இந்த மாதத்தில் தான் உயிரினங்களும், மேகங்களும் கர்ப்பம் தரிக்கும். இந்த மாதத்தில் தான் ஸ்ரீவைகுண்ட கதவு பத்ரிநாத் கதவு போல் திறக்கப்படுமாம். பகவான் இந்த மாதத்தில் தான் அருதுயிலிலிருந்து எழுந்திருக்கிறார். இந்த மாதத்தில் தான் நடராஜப் பெருமானும் ஆனந்தத்தாண்டவம் புரிந்தார்.

வருஷத்திற்கு வேண்டியதாய் புதிதாய் விளைந்து வந்த நவதான்ய ஔஷதிகளை இந்திரனுக்கு இட்டு, நாட்டின் சுபீக்ஷத்தையும் வேண்டி இந்த இஷ்டி செய்யப்பட வேண்டும். ஆண்டாள் *"மேலையார் செய்வனகள்"* எனவும், நோன்பு எனவும் இக்கருத்தைச் சுட்டிக் காட்டினார். இதைத் தான் பிற்காலத்தில் தமிழ்நாட்டில் பாவை நோன்பாக அனுஷ்டித்தார்கள் எனவும் அறியலாம். வால்மீகியும் ஹேமந்த ருதுவின் வர்ணனையில் இந்த ஹேமந்த ருதுவை, ஆண்டின் அணி எனப் புகழ்ந்திருக்கிறார். கண்ணனும் மாதங்களில் நான் மார்கழி என்றார். இப்புனிதமான மாதத்தை சூன்யமாதம் என்றது எது கொண்டோ? ஒருக்கால் இம்மாதத்தில் திருமணம் முதலிய மங்கள காரியங்கள் யாரும் செய்யாததாலும், தேவி பாகவதத்தில் புரட்டாசியையும், மார்கழியையும் கால தேவதையின் கொடிய கோரைப் பற்கள் என்று கூறியதாலும் சூன்ய மாதம் என்றார் போலும். மூன்று நவராத்திரிகளில் ஹேமந்த நவராத்திரி சிறப்பானதாகும். அது இந்த மாதம் முழுவதும் அல்லது திருவாதிரைத் திருநாள்

என்றும் கன்னிப் பெண்களால் அனுஷ்டிக்கப்படும்.



**பாவையின் பார்வை :**

இத்தலைப்பு இரு பொருள். பாவை நோன்பு அல்லது பாட்டின் சிறப்பு எனவும், அம்பாள் திருமகள் இவர்களின் அருட் கடாக்ஷம் என பாவை – நோன்பு – காத்யாயனி, அம்பாள் எனப் பொருள். பார்வை– கடைக்கண் பார்வை, மதிப்பு எனவும் பொருள் உண்டு. பாவை நோன்பு நாட்டில் மழை பெய்து நல்ல வளத்தைக் கொடுக்கவும், கன்னிப் பெண்களுக்கு நல்ல கணவன் கிடைக்கவும், சங்கக் காலத்தில் தை நீராடல் அனுஷ்டிக்கப்பட்டது. யாப்பருங்கல விருத்தியில், *"கோழியும் கூவின குக்கிவழைத்தன"* என்ற செய்யுளால் இந்நோன்பு குறிக்கப்பட்டது.

திருவாதவூர் புராணத்திலும், *"தம்பரிவாலேற்றி இறைஞ்சி"* என்ற அடியாலும், பிங்கலந்தையில் *"பணி நீர் தோயலும்,பாவை ஆடலும்"* எனவும், பாகவதம் பத்தாவது ஸ்கந்தத்தில் *"ஹேமந்த ப்ரதமே மாஸி"* என்று தொடங்கும் நான்கு செய்யுள்களாலும், நற்றிணையில் *"வான் பெயல் நனைத்த புறத்த"* என்ற அடியாலும், ஓங்கு பரிபாடலில் *"அம்பாவாடலினாய்"* என்ற அடியாலும் காட்டப்பட்டுள்ளது. பாவை என்பது ஒரு வகை கூத்து என்றும், அது நின்றாடல், வீழ்ந்தாடல் என 11 வகை எனவும் கூறி, அந்தப் பாவை நடனத்தைத் திருமகள் அவுணர் அழியச் சொல்லியும், பாவை போல் வைகுண்ட அரங்கத்தில் நடனம் ஆடினாள் எனவும் பழந்தமிழ் நூல் கூறும். திருவரங்கம் என்ற பெயரில் இவ்வுண்மை உண்டு. *"திருவாடல் பாவை அதற்கு உறுப்புத் தேரின்"* என்ற அடியாலும் *"திருவின் செய்யோன் ஆடிய பாவையும்"* என்ற அடியாலும் பழம் நூலில் கூறப்பட்டுள்ளது.


**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

## வாசகர்களுக்கு அறிவிப்பு!!

**"ஸப்தகிரி பொன்விழா மலர்" கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன**

தி.தி.தே. சமய மாத இதழான ஸப்தகிரி கலியுக கண் கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானின் வைபவத்தையும், திருமலை குறித்தும் பிரதி மாதம் தவறாமல் வாசகர்களுக்கு வழங்குகிறது. ஆறு மொழிகளிலும் வெளிவருகின்ற ஆன்மீக, அறநெறி பத்திரிக்கைகளில் முன்னிலையில் உள்ளது.

ஸப்தகிரி "சிறப்பு பொன்விழா இதழை" வெளியிட கருதுகிறது. ஆதலால் வாசகர்கள் ஸப்தகிரி குறித்து தங்கள் அனுபவங்களை எழுதி எங்கள் அலுவலகத்திற்கு அனுப்புங்கள். அவற்றை பரிசீலித்து ஸப்தகிரியில் பிரசுரிக்கப்படும்.

கட்டுரைகளை அனுப்ப வேண்டிய முகவரி : பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், தி.தி.தே. அச்சக வளாகம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி–517 507. கட்டுரைகளை தட்டச்சு செய்து tamilsapthagiri50years@gmail.com என்ற இ–மெயிலிற்கு அனுப்பவும்.

– பிரதான ஆசிரியர்


பாவை என்றால் பதுமை, பெண், குரவை கூத்து, நோன்பு என்றெல்லாம் பொருள். வரந்தருவார் *"தமிழ்க் கன்னிமை யருப்பிலே பயின்ற பாவை"* என்ற அடியால் பெண் என்ற கருத்தில் கூறினார்.

இந்தத் திருப்பாவை நோன்பையும், தமிழ்ப் பண்பாட்டையும் கண்ட ஆங்கில மேதை விக்டர் கௌசின் என்பவர் "We are constrained to bend the Knee before that of the East and to see in the crade of the human race; the native Pand of the highest philosophy religion"என்றார்.

இன்பம் தரும் மேலும் பல கருத்துக்களும் பாவை நூலுக்கும், பாவை நோன்பிற்கும் உண்டு. இடம் கருதி இத்துடன் சுட்டிக் காட்டி முடிப்போம்.

# 108 திவ்விய தேசவைபவம்



# திருமாலிருஞ்சோலை

– திரு. உருபட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

பிரம்மாண்ட புராணம், வாமன புராணம், வ்ருஷபாத்ரி மகாத்மியம் போன்றவைப் பல சரிதங்களைச் சொல்கின்றன. தர்ம தேவதை (எமன்) கட்டிய கோயில் என்பர். தேவதச்சன் விச்வ கர்மாவால் செய்யப்பட்ட சோமச்சந்த விமானத்தில் எம்பெருமான் இங்கு எழுந்தருளப் பண்ணினார் என்பர்.

சுதபஸ் என்கிற ரிஷி, இங்கு தபஸ் செய்தபோது, துர்வாசர் வருகையை அறியாது அவரது கோபத்துக்கு ஆளாகி, அவரால் மண்டுகமாகப்போகுமாறு சபிக்கப் பட்டு, பிறகு அவராலேயே இந்தத் தலத்திலேயே சாப விமோசனம் பெற்றதாகச் சொல்வர். தவளையாக மாறியும், அவர் தவத்தை விடவில்லை என்பர். மார்க்கண்டேயர் இங்கு, நூபுர கங்கை அருகே வாழ்ந்து கள்ளழகரைச் சேவித்து சிரஞ்சீவித் தன்மையை அடைந்தாராம். துர்வாசரின் கோபத்துக்கு ஆளாகிய அம்பரீஷன், இந்த எம்பெருமான் அருளால் காக்கப்பட்டு, வைகுண்டத்தில் கைங்கர்யம் செய்யும் பேறு பெற்றானாம். மலையத்வஜன் என்கிற பாண்டிய மன்னன், புஷ்பக விமானத்தில் ஏறி தினமும் கங்கைக்குச் சென்று நீராடித் திரும்புவதைக் கண்ட இந்த எம்பெருமான் ஒரு நாள், அழகர் மலைக்கு மேல் விமானம் பறக்கும்போது தடுத்து கீழே இறக்கி நூபுர கங்கை என்கிற சிலம்பாறு கங்கையை விடச் சிறந்தது என்பதை உணர்த்த அன்று முதல் அரசன் நூபுர கங்கையில் நீராடி அழகரை வழிபட்டான் என்பர்.

திரிவிக்ரமாவதாரத்தில், பிரம்மா, பகவானின் திருவடிக்கு அபிஷேகம் செய்ய, அந்த நீரின் ஒரு பகுதி காலின் சிலம்பில் பட்டு, சிலம்பாறு என்கிற நூபுரகங்கையாக ஆயிற்று என்பர். இப்பெருமான் அருளால் பிறந்த கூன்பாண்டியனின் குழந்தையே, மதுரை சோமசுந்தரரை மணந்து மீனாட்சி ஆனாள் என்பர். சிலப்பதிகாரம், இந்த மலையை திருமால் குன்றம் என்று புகழ்கிறது.

**சிறப்புகள் :**

மலை மக்களாகிய கள்ளர்களின் குலதெய்வம் இவர். இவர் அழகர். சுந்தரத் தோளுடையவர். இவர் வீற்றிருக்கும் மலை வ்ருஷபாத்ரி – காளை போன்று காட்சி தருகிறது. மற்றைய மலைகள் பசுக்களைப் போல! அர்ச்சாவதார இந்த எம்பெருமானைக் காக்கும் கடமையை பதினெட்டாம்படி கருப்பன் செவ்வனே, இப்போதும் நிறைவேற்றுகிறார். இத்தலத்தில் ஆண்டாளை அமர்ந்திருக்கும் திருக்கோலத்தில் சேவிக்கலாம். (எங்கும் தரிசிக்க முடியாத அழகு. மண்டுக மகரிஷிக்கு அருள் பாலிக்க சித்ரா பௌர்ணமியன்று, நம்பிரான் என்கிற குதிரை வாகனத்தில் வைகையாற்றில் அழகர் இறங்குவது, லக்ஷக்கணக்கான பக்தர்கள் கும்பிட்டும், கூத்தாடியும் அழகரைக் கொண்டாடுவது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் திருவிழாவாகும்.



ஓம் ப்ரபாயை நம:

| | | |
|---|---|---|
| பெருமாள் | – | சோரஸுந்தரர் (கள்ளழகர்), மாலிருஞ்சோலை நம்பி, ஏறு திருவுடையான், சுந்தரபாகு, பரமன் – கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம். |
| உத்ஸவத்திருமேனி | – | சொக்கத்தங்கம். |
| தாயார் | – | சுந்தரவல்லித் தாயார், |
| தீர்த்தம் | – | நூபுர கங்கை (சிலம்பாறு). |
| விமானம் | – | சோமச்சந்த விமானம். |
| ஸ்தல விருக்ஷம் | – | சந்தன மரம். |
| ப்ரத்யக்ஷம் | – | தர்ம தேவதை, மலயத்வஜ பாண்டியன். |
| ஆகமம் | – | வைகானஸம். |
| மங்களாசாஸனம் | – | பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை ஆழ்வார். |

## த்யான ச்லோகம்

*புண்யே ஸ்ரீவ்ருஷ பாசலே வஸதியஸ் ஸௌந்தர்ய வல்ல்யாந்வித:*
*ரூபாந் நிர்ஜித லப்த கோடி மதநோ நாம்நாச யஸ்ஸுந்தர:!*
*யோவை நூபுர கங்க யாச்ரித பத: சந்த்ராக்ய வை மாநிக:*
*வஜ்ரீதிக்வதந: ப்ரபாதி ஹ்ருதயே தர்மேண ஸாக்ஷாத் க்ருத: ||*

## பாசுரம்

*"திருமாலிருஞ் சோலை மலையே திருப்பாற்கடலே என் தலையே*
*திருமால் வைகுந்தமே தண் திருவேங்கடமே எனதுடலே*
*அருமாமாயத் தெனதுயிரே மனமே வாக்கே கருமமே*
*ஒரு மா நொடியும் பிரியானென் ஊழி முதல்வன் ஒருவனே"*

– நம்மாழ்வார்

*"எருத்துக் கொடியுடையானும் பிரமனு மிந்திரனும், மற்றும்*
*ஒருத்தரு மிப்பிறவியென்னும் நோய்க்கு மருந்தறி வாருமில்லை*
*மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா! மறுபிறவிதவிரத்*
*திருத்தி, உன் கோயில் கடைப்புகப் பெய்திரு மாலிருஞ்சோலை எந்தாய்!*

– பெரியாழ்வார்

*"நாறு நறும் பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு, நான்*
*நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன்*
*நூறு தடா நிறைந்த அக்கார வடிசில் சொன்னேன்*
*ஏறுதிருவுடையான் இன்று வந்து இவை கொள்ளும் கொலோ!*

– ஆண்டாள்

*"தேனொடு வண்டாலும் திருமாலிருஞ்சோலை*
*தானிடமாக் கொண்டான் மலர்க் கண்ணிக்காய்*
*ஆன்விடையேழன்றடர்த்தாற் காளானா ரல்லாதார்*
*மானிடவர் அல்லரென்று என் மனத்தே வைத்தேனே."*

– திருமங்கை ஆழ்வார்

*"பணிந்தேன் திருமாலை; பாமாலை தாளில்*
*அணிந்தேன் அருள் தஞ்சமாகத் - துணிந்தேன்*
*திருமாலிருஞ்சோலை சேர்ந்தேன்; எனக்கு*
*வருமால் இருஞ்சோதி வான்."*

(பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்)

## நாமாக்கள்

381. *ஓம் கர்த்தாய நம:*
(தானே சுதந்திரமாகச் செய்பவனே)
*ஓம் ஸ்த்ரீஸமாஹ்வாயாயை நம:*
(பெண்மைக்கு ஏற்ற பண்புகள் உள்ளவளே)

382. *ஓம் விகர்த்தாய நம:*
(பிறர் இன்ப துன்பங்களில் பங்கு கொள்பவனே)
*ஓம் இக்ஷுசாபாயை நம:*
(கரும்பு வில் உடையவளே)

383. *ஓம் கஹநாய நம:*
(பிறர் அறிய இயலாத மகா குணத்தை உடையவனே)
*ஓம் ஸுமஸராயை நம:*
(புஷ்ப பாணங்களை உடையவளே)

384. *ஓம் குஹ: நம:*
(உலகத்தைக் காப்பவனே)

- ➪ ஸ்வாமி பிரசாதத்தை வீணாக்காதீர்.
- ➪ புஷ்கரணியில் ஷாம்பு, சோப்பு உபயோகப் படுத்தாதீர்.
- ➪ பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்தாதீர்.
- ➪ திறந்த வெளியில் துப்புதல் போன்ற அருவருப்பான செயல்களை செய்யாதீர்.
- ➪ க்யூ வரிசையில் மற்றவரை முந்திக்கொண்டும், நெருக்கிக் கொண்டும் செல்லாதீர்.

**ஓம் சந்த்ரவதனாயை நம:**

**ஓம் திவ்ய பூஷாயை நம:**

(நித்ய ஸூரிகள் திருவாபரணங்களாகத் தோன்றி சேவை சாதிப்பவளே)

385. **ஓம் வ்யாஸாய நம:**

(எல்லாவற்றையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவனே)

**ஓம் மனோஹராயை நம:**

(மனத்தை ஈர்ப்பவளே)

386. **ஓம் வ்யவஸ்த்தாந: நம:**

(எல்லாவரையறைகளுக்கும் ஆதாரமானவனே)

**ஓம் வாஸவ்யை நம:**

(எல்லாவற்றையும் அளித்துக்காக்கும் பகவானின் பத்னியே)

387. **ஓம் ஸம்ஸ்த்தாந: நம:**

(எல்லாம் கடைசியில் தன்னிடம் சேரப் பெற்றவனே)

**ஓம் பாண்டரச் சத்ராயை நம:**

(வெண்முத்துக்குடை உடைவளே)

388. **ஓம் ஸ்த்தாநத: நம:**

(த்ருவன் முதலானவர்க்குத்தக்க பதத்தை அளிப்பவனே)

**ஓம் கரபோரவே நம:**

(யானையின் துதிக்கை போன்ற திருத்தொடையை உடையவளே)

389. **ஓம் த்ருவ: நம:**

(அழியாத மூர்த்தியே )

**ஓம் திலோத்தமாயை நம:**

(எள்ளளவும் குற்றமில்லா உத்தமியே)

390. **ஓம் பார்த்தி: நம:**

(கல்யாண குணங்களால் செழிப்பு உள்ளவனே)

**ஓம் ஸீமந்திந்யை நம:**

(சிரஸ்ஸில் அழகிய வகிடு உள்ளவளே)

**ஸ்ரீமதே ஸுந்தரவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீவ்ருஷாபாதீஸ்வராய - சோரஸுந்தர பரப் ப்ரஹ்மணே நம:**

மதுரையிலிருந்து வடகிழக்கே சுமார் 20 கி.மீ. மலையடிவாரத் திருத்தலம்.

**திவ்ய தேச வைபவம் வளரும்...**

*தெய்வமகள் ஆண்டாளின் திருப்பாவைத் தேனின்*
*சுவையறியும் திங்களென மார்கழி மாதம்*
*உய்வகையால் ஆண்டுதொறும் உவகை பூக்கும்!*
*ஓங்கியுயர் உலகளந்த உத்தமன் பேரில்*
*பெய்மழையாய்த் தேனமுதப் பாவைப் பாடல்*
*பெரியாழ்வார் மகளாகிச் செய்தாள் வாழி!*
*செய்தவமே, நாமெல்லாம் பாடல் போற்றிச்*
*செங்கண்மால் திருவடியைப் பற்றிக் கொள்வோம்!*

*ஆயர்குலப் பெண்ணாக வரித்துக் கொண்டே*
*ஆழ்ந்திட்ட பக்தியினால் கண்ணன் புகழில்*
*தோய்ந்தாரைத் தீவினைகள் சாரா தென்றே*
*துல்லியமாய்த் தன்பாட்டில் தோயச் செய்தோள்!*
*நாயகமாய்த் தான்நின்றே மாலோன் புகழை*
*நாவினிக்கப் பாடுகின்ற ஆண்டாள் வாழி!*
*சேய்நமக்கே அவள்பாடல் தெய்வக் கவசம்!*
*செந்தமிழின் புகழுக்கே மணியாம் மகுடம்!*

*வாழ்ந்திடுவோம் ஏழ்பிறப்பும் உன்னோ டென்றே*
*வள்ளலவன் திருமாலின் உள்ளக்கோயில்*
*ஆழ்ந்திடுநல் பக்தியினால் ஆழ்வார் ஆனாள்!*
*அரங்கனுக்கே ஆட்படவே உறுதி கொண்டாள்!*
*வளர்ந்திருக்கும் பொற்பாவை ஆண்டாள் தன்னை,*
*வாய்மணக்கப் பேர் சொல்லிப் போற்றல் செய்வோம்!*
*வளர்ந்திடுமே நம்இல்லில் வளமார் செல்வம்!*
*வானுயர்த்த புகழ்பெறலாம் வாரீர்! வாரீர்!*

*பெரியாழ்வார் பல்லாண்டு பாடல் போலே*
*பெரும்புகழின் திருப்பாவை செய்தார் போற்றி*
*பெரிதான அவதாரக் கதைகள் எல்லாம்*
*திருப்பாவை வரிகளிலே மிளிரச் செய்தாள்*
*அரிதான நோன்பினையே நோற்கச் சொல்லி*
*அளப்பரிய செல்வமெலாம் மகளிர் பெறவே*
*பரிவான செந்தமிழில் பாடல் செய்தாள்*
*பாதமலர்த் தாமரைகள் போற்றி! போற்றி!*

– முனைவர். ச.செந்திலாண்டவன்,
சென்னை.





பகவத் கீதை – இளைய சமுதாயம்

# கீதா ஜெயந்தி

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்- 6304428489

டிசம்பர் 8ஆம் தேதி கீதா ஜெயந்தி உத்ஸவம் வருகின்றது. உலகிலேயே ஒரு நூலிற்கு உத்ஸவம் கொண்டாடப்படுவது பகவத் கீதைக்கு மட்டுமே ஆகும். பகவத்கீதை சாட்சாத் பரந்தாமனின் மருஉருவமாகும். சாட்சாத் ஸ்ரீகிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்கு உபதேசித்த ஞானசாரமே பகவத்கீதையாகும். பகவத் கீதை அவதரித்தது அற்புதமான வெற்றியை, ஐச்வர்யத்தை, அசாதாரணமான சக்தியை, நீதியை வழங்குவதற்காகவே என்பது தெரிந்து கொண்டால் கீதையால் அமோகமான, அபூர்வமானவைகள் கிடைக்கும். உலகில் ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையில் வெற்றியையே விரும்புவர். ஆனால் வெற்றியானது நிச்சயமாக கிடைக்கும் என ஒரு சிலர் மட்டுமே நம்பிக்கையுடன் கூறுவர். வெற்றியே வேண்டாம், என கூறியவனாக இவ்வுலகிலேயே அர்ஜுனன் ஒருவனை மட்டுமே கூற முடியும். “வெற்றி வேண்டாம் அரசு போகம் வேண்டாம்”, என்று கூறிய அர்ஜுனன் பகவத்கீதை உபதேசம் பெற்ற பிறகு, வெற்றியடைந்து விஜயனாக சிறப்புப் பெற்றான். அதாவது, யாராவது தனக்கு வெற்றி வேண்டவே வேண்டாம் என்று எண்ணினால், பகவத்கீதையை முழுமையாகக் கேட்டு, கடைபிடித்தால் வெற்றியை நிச்சயமாக அடைவர். இதன் வாயிலாக அறிவது என்னவெனில் வெற்றியை விரும்புவோர் நூற்றிற்கு நூறு சதவீதம் இருந்தாலும், நிச்சயமாக வெற்றி கிடைக்கும் என நம்பிக்கையுடன் இருப்போர் பத்து சதவீதம் கூட இருக்க மாட்டார்கள். யாரொருவர் கீதையை கடைபிடித்து, கீதையின்படி தன் வாழ்க்கையில் செல்கிறானோ அவன் நூற்றிற்கு நூறு சதவீதம் வெற்றியை அடைகிறான். அதுமட்டுமின்றி வெற்றியை அடைவேன் என்கிற நம்பிக்கையைப் பெறுகிறான். இது தான் மகிமையும் ஆகும். மனிதர்களுக்கு அவர்களின் வாழ்க்கையில் வெற்றியை அளிப்பதற்காகவே கீதை தோன்றியது.

பகவத் கீதை வெற்றியை எப்படி அளிக்கின்றது என்பதனை மாணவர்கள் அறிந்து கொண்டாலே போதும் கீதையின் ரசிகர்களாகி விடுவர். கீதையின் வாயிலாக முதன்முதலில் உண்டாகக்கூடிய விளைவு மோகம் விலகுவதாகும். மோகம் என்பது செய்ய வேண்டிய பணிகளை மறக்க வைத்து ஏதாவது ஆலோசனைகளுக்கு கொண்டு செல்வதாகும். அர்ஜுனன் போர் புரிய போர்களத்திற்குச் சென்று, அவனுடைய கடமையை செய்யாமல், துறவறம் மேற்கொள்ள தீர்மானம் கொள்வது மோகத்திற்கு அடிபணிவதாகும். நன்றாக படிக்க வேண்டிய மாணவர்களும், படிப்பைத் தவிர சிறந்தது வேறொன்றுமில்லை என்பதனை மறந்து, அதற்கு பதிலாக வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் மோகத்திற்கு அடிபணிவதேயாகும். இது சுமார் எண்பது சதவீதம் மாணவர்களிடையே உள்ளது. கீதையின் வாயிலாக மோகம் தொலைந்து, நினைவாற்றல் உண்டாகிறது. அர்ஜுனனுக்கு கீதை உபதேசத்திற்குப்

பிறகு கடமை உணர்ச்சி நினைவிற்கு வந்ததை போல், மாணவர்களுக்கும் தம்முடைய கடமை என்ன என்பது நினைவிற்கு வரும். அதுவே சிறந்த வளர்ச்சியுமாகும். கடமை நினைவிற்கு வந்த உடனே அவன் திடமானவனாகவும் சஞ்சலமற்றவனாகவும் ஆகின்றான்.

இதுபோன்ற அற்புதமான வளர்ச்சியை வாழ்க்கையில் தக்க வைத்துக் கொள்ளும் மனிதனுக்குள் இருக்கும் சந்தேகங்கள் எல்லாம் தொலைந்து விடும். சந்தேகம் என்பது பேயைப் போன்றது. அது மனதினை ஆட்டிப் படைக்கும் வல்லமை கொண்டது. ஆனால் ஒரு நிலைப்பாடாக இருக்கும் மாணவனுக்கு சந்தேகம் என்பது தொலைந்து போய் விடும். அப்பொழுது செய்ய வேண்டிய செயல்கள் மட்டுமே எதிரே நிற்கும்.

*''கரிஷ்யே வசநம் தவ''* – "ஸ்ரீகிருஷ்ணா! நீ கூறும் செயலை செய்ய தயாராக இருக்கின்றேன்" என அப்பொழுது அர்ஜுனன் கூறுகின்றான். *''க்ருஷிதோ நாஸ்தி துர்பிக்ஷம்''* – "கடினமாக உழைப்பவனுக்கு முடியாதது எதுவுமே இல்லை". இருப்பினும் தொடர்ந்து உழைப்பவனுக்கு அற்புதமான நிலையினை பகவத்கீதை வழங்குகின்றது. இவ்விதமாக மானிடர்கள் அனைவரையும் கடமையை செய்பவர்களாக மாற்றி வாழ்க்கையில் அற்புதமான வெற்றிகளை அளிப்பதற்காகவே பகவத்கீதை தோன்றியது.

எப்பொழுது மனிதன் முக்கியமாக இளைஞர்கள் கீதையின் அபிமானிகளாக மாறுகின்றனரோ அப்பொழுது வாழ்க்கையில் வெற்றிகளை படிப்படியாக அடைகின்றனர். இந்த கீதா ஜெயந்தி நிகழ்ச்சி உங்கள் சுற்றுப்பகுதிகளில் எங்கு நடைபெற்றாலும் தவறாமல் அதில் பங்கு கொள்ளுங்கள்.

அதுவே நீங்கள் கீதையின் அபிமானிகளாக ஆவதற்கு முதல் படியாகவும், முதல் முயற்சியாகவும் அமையும். இந்த சிறிய முயற்சியே உங்கள் வாழ்க்கையில் பெரிய வெற்றியையும், மகிழ்ச்சியையும், சுகத்தையும் அளிக்கும்.

பகவத்கீதை தொடரும்...

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# சிறார் வாக்கு

*குழந்தைகளே ... நீங்கள் எழுதுங்கள் ! பெரியோர்களே ... நீங்கள் ஊக்குவியுங்கள் !!*

சிறுவர் சிறுமிகளிடையே நம்முடைய பண்பாட்டின் மீதும், தர்மத்தின் மீதும், புராணத்தின் மீதும், பகவானின் மீதும், பெரியோர்களின் மீதும் ஒரு நல்ல எண்ணம் ஏற்படுவதற்கும், ஆன்மீகச் சிந்தனையை வளர்ப்பதற்கும் சிறார் வாக்கு எனும் தொடர் பிரதி மாதம் ஸப்தகிரி இதழில் மலர்கிறது.

### யாரெல்லாம் எழுதலாம்? என்ன எழுத வேண்டும்?

பத்தாம் வகுப்பு அல்லது அதைவிடக் குறைந்த வகுப்பில் படிக்கும் மாணவ மாணவிகள் அனைவரும் எழுதலாம். நீங்கள் படித்த கதிதங்கள், நீங்கள் கேட்ட தர்ம நீதிக்கதைகள், ஹரிகதைகள், புராணங்கள், இதிஹாசங்கள், நீதிசதகங்கள் முதலானவற்றில் உள்ள ஆன்மீகக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் கதையாகவோ, கவிதையாகவோ, கட்டுரையாகவோ அல்லது பகவான் மீது உங்களுக்கு எழும் சிந்தனையினையோ எழுதலாம்.

### பெரியோர்கள் செய்ய வேண்டியன...

குழந்தைகளிடம் நம்முடைய புராண, இதிஹாஸங்கள் மீது நல்அறிவினை வளர்ப்பதற்கு அவர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கி, சிறிய சிறிய ஆன்மீக நூல்களை படிக்குமாறு அவர்களை ஊக்குவித்து எழுத வையுங்கள்.

### நிபந்தனைகள் :

**படைப்பு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும். முழு விலாசம், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன், படைப்பு உங்கள் சொந்தமானது என்னும் உறுதிப்பத்திரத்தில் நீங்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரியர் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். நீங்கள் படைப்பினை அனுப்பின பிறகு இறுதி முடிவு பிரதான ஆசிரியருடையதே. படைப்பின் மீது எத்தகைய கடிதப் போக்குவரத்துக்கும் இடமில்லை.**

*படைப்பினை அனுப்ப வேண்டிய முகவரி :*

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், கே.டி. சாலை, தி.தி. தேவஸ்தானம், திருப்பதி–517 507.



தொடர்







# ஆயுர் வேதம்

# புங்கை மரம்


தெலுங்கு மூலம் : டாக்டர். சி. மதுசூதன சர்மா.
: 90007 61390.
தமிழாக்கம் : திருமதி. பா. காயத்ரி
9744657115


நம் கிராமம் மற்றும் நகரங்களில், சர்வ சாதாரணமாக வளரக்கூடிய மருத்துவ குணம் நிறைந்த ஒரு மரமே "புங்கை மரம்".

இது சமஸ்கிருதத்தில் "கரன்ஜா" என்று கூறப்படுகிறது. இதன் இலைகள் தடிமனாகவும், மென்மையாக எண்ணெய் தடவினாற்போல் காட்சியளிப்பதால் இதனை "ஸ்நிக்தபத்ர" என்றும் கூறுவர். இதன் மலர்கள் கொத்து கொத்தாக இருப்பதால் இதனை "குச்ச புஷ்பா" என்றும் கூறுவர். இதன் வித்துக்களிலிருந்து வரும் எண்ணெய், நெய் போன்று தோற்றமளிப்பதால் இதனை சமஸ்கிருதத்தில் "க்ருதபூரகா" என்றும் அழைப்பர். "பாசிலியோநேசி" எனும் தாவர குடும்பத்தை சார்ந்த இந்த புங்கை மரத்தின் தாவரப் பெயர் "பொங்கமியா க்லாப்ரா" என்பதாகும். ஆங்கிலத்தில் Indian Beech என்பர்.

புங்கை மரத்தின் ஒவ்வொரு பாகங்களையும், நம் வாழ்க்கையில் அன்றாடம் ஏற்படும் நோய்களை குணப்படுத்த எப்படி உபயோகிப்பது என்பதை பார்க்கலாம்.

### சுவாசக் கோளாறுகளை குணப்படுத்த:

பத்து புங்கை மர விதைகளை எடுத்து, தோல் நீக்கி, அத்தோலின் உட்பகுதியை சுரண்டி எடுத்து, தேவையான அளவு நீர் சேர்த்து நன்றாக அரைக்கவும். இதனை 100 மி.லி. நெய்யுடன் சேர்த்து கருப்பு நிறமாகும் வரை வதக்கி, ஆரவைத்து, வடிகட்டி கொள்ளவும். இரவு உறங்கும் முன்பு 3–4 துளி வீதம் இடது மற்றும் வலது மூக்கு துவாரங்களில் இடவும். இவ்வாறு செய்தால் மூக்கு வறட்சி, அடைப்பு முதலியன குறைந்து எளிமையாக சுவாசிக்க முடியும்.

### மூலநோய்/அண்டவாதத்தை சரிசெய்ய :

5–6 இளம் புங்கை மர இலைகளை அரைத்து, 100 மி.லி. மோருடன் சேர்த்து, தினமும் இருமுறை பருகவும் அல்லது 25 கிராம் புங்கை மர விதைகளை (தோல் நீக்கி) பொடி செய்து, 2–3 கிராம் வீதம் 50 கிராம் வெல்லத்துடன் 100 மி.லி. நீரை கலந்து, அதிகாலை வேளையில் பருகவும். மேற்கூறியவற்றிற்கு முன்னதாக 2–3 இளம் புங்கை மர இலைகளை விளக்கெண்ணெய்யுடன் சேர்த்து நன்கு அரைத்து, இக்கலவையை பாதிக்கப்பட்ட இடத்தில் இரவு நேரத்தில் தடவி விட்டு, காலையில் சுத்தப்படுத்தவும்.

### உடல் துர்நாற்றத்தை நீக்க :

குளிப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு, 50 கிராம் புங்கை மர விதை பொடி மற்றும் புளி சேர்த்தரைத்த கலவையை உடலில் தடவி, அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரத்திற்குப் பிறகு குளித்தல் வேண்டும்..

### ஆண்களுக்கான வீக்கம், விதைப்பை வலியை குறைக்க:

புங்கை மர விதை, ஆமணக்கு விதை மற்றும் "நிக்கர் நட்" முதலியவற்றை சம அளவில் எடுத்து, தேவையான அளவு நீர் இட்டு, நன்கு அரைத்து இந்த கலவையை பாதிக்கப்பட்ட இடத்தில் தடவி, 1–2 மணி நேரத்திற்குப் பிறகு சுத்தம் செய்யவும்.

### அடிக்கடி சிறுநீர் கழித்தலை தடுக்க :

காய்ந்த புங்கை மர மலர்களை பொடியாக்கி, இப்பொடியை 2–3 கிராம் வீதம், 100 மி.லி. மிதமாக சூடாக்கிய நீரில் கலந்து தினமும் இருமுறை குடிக்கவும்.

## சிறுவர் பகுதி விடைகள்

1. குடந்தை ஸ்ரீசாரங்கபாணி கோயில்
2. மகாலக்ஷ்மி, பூமாதேவி, நீளா தேவி.
3. கூடலழகர் பெருமாள் கோயில்.
4. திருமங்கையாழ்வார், திருமழிசை யாழ்வார், பெரியாழ்வார்.
5. ஈரோடு, சத்தியமங்கலத்தில் ஸ்ரீவேணு கோபால பெருமாள் கோயில், 120 அடி உயரமுள்ளது.
6. ஸ்ரீவேணுகோபாலப் பெருமாள் கோயில், சத்திய மங்கலம், ஈரோடு.
7. பூரம்.
8. காஞ்சிபுரம்.
9. அமர்ந்த நிலை, நின்ற நிலை, சயன நிலை.
10. ஸ்ரீநவநீதக்கிருஷ்ணர் கோயில்.

தொகுப்பு : திருமதி. கே. ராஜலட்சுமி, நங்கநல்லூர்

**ஸொரியாஸிஸ் எனும் தோல் நோயை குறைக்க :**

200 மி.லி. நீருடன், 2–3 கிராம் வீதம் புங்கை மர விதை பொடி மற்றும் பனை வெல்லம் சேர்த்து 100 மி.லி. ஆகும் வரை சூடாக்கி, ஆரவைத்து, வடிகட்டி கொள்ளவும். இந்த நீரை குடித்தால் தோல் நோய் மற்றும் மூட்டு வலி குறையும்.

**தோல் நோய்களை போக்க :**

புங்கை மர விதையை, தேவையானளவு நீர் அல்லது எலுமிச்சை சாறு அல்லது "கைசால் மோக்ரா" எண்ணெய்யுடன் சேர்த்தரைத்து, இக்கலவையை பாதிக்கப்பட்ட இடத்தில் தடவினால் படர்தாமரை, எக்ஸிமா போன்ற தோல் நோய்கள் குணமாகும்.

**காய்ச்சல் நீங்க :**

20 கிராம் புங்கை மர விதை பொடி, 20 கிராம் திப்பிலி மற்றும் 10 கிராம் கருப்பு கருவேலம் பசையை தேவையான அளவு நீர் சேர்த்து, அரைத்து, கோலி யளவு சிறிய மாத்திரையாக செய்து வேளைக்கு ஒன்று வீதம், தினமும் இருமுறை மிதமாக சூடாக்கிய நீருடன் சாப்பிடவும்.

**சளி, இருமல், கபம் குணமாக:**

புங்கை மரப்பட்டையை எரித்து அதிலிருந்து கிடைக்கும் சாம்பலை சலித்து கொள்ளவும். இச்சாம் பலை 1–2 கிராம் வீதம், 10 மி.லி. இஞ்சி சாறு/தேவை யானளவு தேனுடன் சேர்த்து குடித்தால் சளி, இருமல், குறட்டை விடுதல் முதலியன குறையும். "ஜாத் யாதி க்ருதம்", "கரம்ஜாதி க்ருதம்", "பில்வாதி குடிகா" முதலிய பல ஆயுர்வேத மருந்துகளை தயாரிக்க புங்கை மர பாகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்வு அல்ல.

ஆயுர்வேதம் வளரும்...


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

பிரதி மாதம் முதல் வெள்ளிக்கிழமை போனில் மட்டுமே!
செயலாட்சித் தலைவருடன் பேசுங்கள்!

டயல் யுவர் ஈ.வோ.

பக்தர்களுக்கு அறிய வாய்ப்பு!

எந்த மாநிலத்திலிருந்தும்,
எம்மொழியிலும்
நீங்கள் நேராக
செயலாட்சித் தலைவருடன் பேசலாம்!
திருமலையான் ஆர்ஜித சேவைகள்,
வசதி வாய்ப்புகள் குறித்த
உங்களிடையே எழும் சந்தேகங்கள்,
கருத்துகள், ஆலோசனைகளை செயலாட்சித்
தலைவருடன் பகிர்ந்து கொள்ளலாம்.

டோல் நெம்பர் : 0877-2263261

நேரம் : காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை.

இந்த வாய்ப்பினை அனைவரும்
பயன்படுத்திக் கொள்ளவும்.



# 2019
# டிசம்பர் மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர், 9949922677

| | | | |
|---|---|---|---|
| | யுரேனஸ் | | ராகு |
| நெப்ட்யூன் | **டிசம்பர் - 2019**<br>5 – புதன் – விருச்சிகம்<br>15 – சுக்ரன் – மகரம்<br>16 – சூரியன் – தனுசு<br>25 – செவ்வாய் – விருச்சிகம்<br>25 – புதன் – தனுசு | | |
| சந்திரன் | | | |
| சுக்ரன் குரு கேது சனி ப்ளூட்டோ | சூரியன் | புதன் செவ்வாய் | |

**மேஷம்**

ராசிநாயகன் செவ்வாய் மாத இறுதி வரையில் 7ம் வீட்டிலேயே சஞ்சரிப்பார். பின்னர் 8ம்மிடத்திற்குச் செல்வதால் வாழ்க்கைத் துணைவரின் நலனில் அக்கறை தேவை. மாத ஆரம்பத்திலிருந்து இறுதிவரை புதன் 8ல் சஞ்சரிப்பதால் குழந்தைகளால் அடையும் மகிழ்ச்சி எதிர்ப்பார்த்த அளவு இருக்காது.

**ரிஷபம்**

சுக்ரன் பாக்கியஸ்தான சஞ்சாரத்தால் ஆன்மீக வாழ்க்கை சிறப்பாக இருக்கும். மருத்துவத் தொழிலில் பெரும் லாபம் ஈட்டலாம். சிறிது கட்டுப்பாடுடன் இருக்க வேண்டும். இல்லையெனில் பெரிய அளவில் விமர்சனங்கள் சந்திக்க நேரிடும். நல்ல நண்பர்கள் அறிமுகமாவார்கள்.

**மிதுனம்**

புதன் முதல் வாரத்தில் ஐந்திலும், பின்னர் ஆறாமிடத்திலும், மாத இறுதியில் ஏழாம் வீட்டிலும் சஞ்சரிப்பார். புகழ் தேடி வரும். பதவியில் உள்ள ஆளும் கட்சி பிரமுகர்களின் ஆதரவு கிடைக்கும். அரசு பதவிகளும் கிடைக்கும். யூக வணிகம் பங்குச் சந்தை போன்றவற்றாலும் லாபம் பெறலாம்.

**கடகம்**

மாத இறுதி வரை செவ்வாய், 4ம்மிடத்தில் சஞ்சரிப்பதால் யூக வர்த்தகத்தில் பெரும் செல்வம் சேரும். முதலிரண்டு வாரங்களில் எதிரிகளால் செல்வம், அதிகாரம், உரிமை கிடைக்கும். மாதப் பிற்பாதியில் மருத்துவத் தொழிலில் பெரும்பணம் சேரும். அயல்நாட்டு வர்த்தகமும் நல்ல முறையில் நடக்கும்.

**சிம்மம்**

அரசாங்கப்பதவியில் பாராட்டுக்கள் குவியும். குழந்தை இல்லாதவர்களுக்கு வாரிசு உருவாகலாம். நிலம், வீடு, வாகனம் மூலம் பொருள் ஈட்டலாம். உடன்பிறப்புகள் மற்றும் அண்டை அயலார்களுடனான உறவில் சுமுகம் குறையும். மாத இறுதி வாரத்தில் நீதி மன்ற வழக்குகள் சாதகமாக முடியும்.

**கன்னி**

மன மகிழ்ச்சி அதிகரிக்கும். மனத்துக்கினிய சம்பவங்கள் நடக்கத் தொடங்கும். புதிய ஆடை அணிகலன் சேரும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். வியாபாரத்தில் முன்னேற்றம் காண வழி பிறக்கும். கல்வித் துறையிலும் சிறந்து விளங்க முடியும். நிறைய சொத்துக்கள் சேரும்.

**துலாம்**

உங்களது கடின உழைப்பு செல்வத்தைத் தேடித் தரும். குடும்பத்தில் சுமுகம் சற்று குறையலாம். பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கப் பண விஷயங்களில் சற்று கவனமாக இருக்க வேண்டும். பழக்க வழக்கங்களில் சிலவற்றை கைவிடுவதால் சமுதாயத்தில் மதிப்பும், மரியாதையும் பெருகும்.

**விருச்சிகம்**

தொழில் முன்னேற்றத்திற்கான தகவல் வந்து சேரும். கணவன் மனைவி உறவு சீராகும். இயந்திரப் பணிகள் மற்றும் நிதி, கல்வி துறைகளிலும் ஆதாயம் பெருகும். எட்டில் ராகு உலவிட சனி நோக்குவதால் தந்தையின் உடல் நலனில் அக்கறைத் தேவை. நீண்ட தூரப்பயணங்களில் கவனம் அவசியம்.

**தனுசு**

2–ல் சுக்ரன், பதினொன்றில் புதன் உலவிடுவது மிகவும் சிறப்பாகும். பாக்கியாதிபதி சூரியனும் மாதப் பிற்பாதியில் தன குடும்பஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போவது நல்லயோகமாகும். தடைபட்டுப் போன சுபகாரியப் பேச்சு வார்த்தைகள் சுமூகமாக முடியும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி காணலாம்.

**மகரம்**

ஒன்பதிற்குரிய புதன், பத்து மற்றும் பதினொன்றாம் இடத்தில் உலவப் போவது மிகவும் சிறப்பாகும். தொழில், வியாபாரம் எதுவாயினும் அதில் பெரும் முன்னேற்றம் காணலாம். எதிர்ப்பார்த்த அரசு வங்கி உதவி எளிதாகக் கிடைக்கும். குடும்பத்துப் பெரியோர்கள் தொழில் வளர்ச்சிக்கு உதவுவார்கள்.

**கும்பம்**

12–ல் சுக்ரன் உலவிடுவதால் தெய்வப் பணிகளிலும், தர்மப் பணிகளிலும் ஈடுபாடு கூடும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் விழிப்புடன் பழகுவது நல்லது. ஏழுக்குரிய சூரியன் மாதப் பிற்பாதியில் பதினொன்றாம் வீட்டில் உலவிடப் போவதால் திருமணத்தால் பெரும் செல்வம், சொத்து சேரும்.

**மீனம்**

ராசி நாயகன் குரு தன் சுய வீடான தனுசுவில் உலவிடுகிறார். அது இந்த ராசிக்குத் தொழில் வீடாகும். எனவே தொழிலில் வளர்ச்சியும் மேன்மையும், புகழும் கிடைக்கும். புதன் ராசிக்கு எட்டில் உலவிடுவதால் கணவன் மனைவியிடையே கருத்து ஒற்றுமை குறையலாம். அனுசரித்துச் செல்லவும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி :
(பெரிய எழுத்துக்களில்)
_______________
_______________
_______________
_______________
_______________

மாவட்டம் & பின்கோடு எண் _________ ☐☐☐☐☐☐

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை

(எம்.ஒ.கூபன் (எண்) : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

(டி.டி. எண்.) : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

---

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

---

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/- ஆயுள்சந்தா ரூ.500/-டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.



ஓம் ஆஹ்லோத ஜனன்யை நம:

திருமலை
திருப்பதி
தேவஸ்தானம்

## பக்தர்கள் சேவையில்...

## ஸ்ரீநிவாச கல்யாணம் உலகெங்கும்...







### சிங்கப்பூரில்...

12-10-2019 அன்று சிங்கப்பூரில் நடைபெற்ற ஸ்ரீநிவாச கல்யாணத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தான பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் குடும்பத்தாருடன் பங்கு கொண்டார். இந்நிகழ்ச்சியில் அவர் உரையாற்றும்போது ஸ்ரீநிவாச கல்யாணம் உலகமெங்கும் பக்தியோடு நடத்துவதினாலேயே ஸ்ரீவேங்கடேஸ்வர பக்தி நிலைத்து நிற்கின்றது என தெரிவித்தார்.





## மெல்போர்னில்...

09.11.2019 அன்று மெல்போர்னில் தி.தி.தே. நிர்வகித்த ஸ்ரீநிவாச கல்யாணத்தில் தி.தி.தே. பொறுப் பாண்மைக்குழுத்தலைவர் திரு.ஒய்.வி. சுப்பா ரெட்டி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இக்கல்யாண வைபவத்தில் அவர் உரையாற்றும் போது கலியுக கண்கண்ட தெய்வம் ஸ்ரீநிவாசன் அருளாசியே மானிடர்களுக்கு ஸ்ரீராம ரக்ஷை என்றார். நாடு விட்டு நாடு வந்தாலும் நம்முடைய கலச்சாரம், பண்பாடு நிரந்தரமாக இருப்பது மிகச் சிறப்பான விஷயம் என்றார். இந்த ஆன்மீக மரபானது அடுத்த தலைமுறையினருக்கும் சென்றடைதல் வேண்டும் என்று அறிவுறுத்தினார். மேற்கத்திய கலாச்சாரத்திற்கு மாறாக தெலுங்கு பண்பாட்டினை கடைப்பிடித்தலைப் பாராட்டினார். அதுபோது திருமலை திருப்பதி தேவஸ்தானம் கொண்டு வரும் திட்டங்களையும் தெரியப்படுத்தினார்.










## திருப்பதியில்...

24.10.2019 அன்று திருப்பதியில் தி.தி.தே. போக்குவரத்துத் துறையில் நவராத்திரியின் ஒரு பகுதியாக ஆயுதபூஜை மிக வைபவ மாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் சிறப்பு விருந்தினா ராகக் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் அவர் உரையாற்றும் போது நவராத்திரி தினத்தில் தி.தி.தே. போக்குவரத்துத் துறையில் ஆயுதபூஜை வழக்கமாக கொண்டாடப்பட்டு வருகின்றது என்றார். பக்தர்களுக்கு சிறப்பான முறையில் சேவையாற்றி வரும் அதிகாரி களுக்கும் ஊழியர்களுக்கும் இந்நன்னாளை முன்னிட்டு வாழ்த்துக் கள் தெரிவித்தார்.

*Edited and Published on behalf of T.T.Devasthanams by **Dr. K. Radha Ramana**, M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. R.V. Vijayakumar,** B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.*

## உலக நன்மைக்காக...

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

### ஸ்ரீநிவாசமங்காபுரம், ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் 16.10.2019 முதல் 18.10.2019 வரை நடைபெற்ற அஷ்டோத்ரசதகுண்டாத்மக ஸ்ரீநிவாச மஹாயாக மஹோத்ஸவத் திருக்காட்சிகள்

















SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams
printing on 25-11-2019. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

